பக்கங்கள்: 23 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 23 ஞாயிற்றுக்கிழமை 10.10.2021 கதிர் 339

**இது ரகசியம் அல்ல!**

கண்டிக்கு புதிய ஆயர் நிய மிக்கப்பட்டமை வடக்கு, கிழக்கி லும் சில எதிர்விளைவுகளை ஏற் படுத்தும் என்று தெரிகின்றது.

அது என்ன தென்னையில் தேள் கொட்ட பனையில் நெறி கட்டுமா என்று நீங்கள் கேட்பது புரிகின்றது.

2

புதிய அம்சங்களுடன் இவ்வாரம் முதல் ஞாயிறு **காலைக்கதிர்** அடுத்தவாரம் முதல் நீங்களும் ஆக்கங்களை வழங்கி உங்கள் பங்களிப்பை நல்கலாம்

## கடலட்டைப் பண்ணைக்கு இடம் கடற்படை உதவியுடன் அளவீடு!

### நாளை மண்டைதீவில் ஆரம்பம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக்.10

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடலட்டைப் பண்ணைக்கென மன்டைதீவுப் பகுதியில் இனம் காணப்பட்ட பிரதேசங்கள் நாளைய தினம் கடற்படையின ரின் உதவியுடன் 'நெக்டா' (தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபி விருத்தி அதிகார சபை) அமைப் பினால் அளவீடு செய்யப்பட வுள்ளன.

குடாநாட்டின சகலதீவுப் பகுதி கள் மற்றும் கரையோரங்கள் உள்ளடங்கிய 19 கடலோரப் பிர தேசங்கள் பண்ணைகளிற்கு உகந்த இடங்களாக ஏற்கனவே நெக்டாவால் இனம் காணப்பட்டு பண்ணை அமைக்க விரும்பு வோர் அதற்கு விண்ணப்பிக்க முடியும் எனவும்

2

## கண்டி ஆயராக வலன்ஸ் மெண்டிஸ்



கண்டி மறைமாவட்ட ஆயரா கப் பணியாற்றிய

2

# நல்லாட்சி மீட்டெடுத்த நாட்டை நாசமாக்கியுள்ளார் கோட்டா!



## போட்டுத் தாக்குகின்றார் சஜித்

சர்வதேசத்தின் பிடியிலிருந்தும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்தும் எமது நல்லாட்சி அரசு மீட்டெடுத்த நாட்டை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாசமாக்கியுள்ளார். அவர் பதவிக்கு வந்து இரண்டு வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் இந்தச் சாதனை யைப் படைத்துள்ளார்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2

## யாழ்.நல்லூர் ஆலயத்தின் நிர்வாகி மாப்பாண முதலியார் காலமானார்!

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாணம், நல்லூர் கந்த சுவாமி தேவஸ்தானத்தின் பத் தாவது நிர்வாக அதிகாரியான இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் காலமானார்.

அவர் கடந்த வாரம் நோய் வாய்ப்பட்டு கொழும்பு வைத்தி யசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில்

2



## மாப்பாண முதலியார் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு



### பிரதமர் மஹிந்த இரங்கல்

குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் இழப்பு, நம் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்று பிர தமர் மஹிந்த ராஜபக்ஷ வெளி யிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது:-

இலங்கைத் திருநாட்டிலே சமய சக வாழ்வுக்கு ஆதாரமாக இருக்கும் ஒரு

2

மாப்பாண முதலியாரின் ஆத்ம சாந்திக்காக

## சிதம்பரம் தெற்கு கோபுரத்தில் ஏற்பட்டப்பட்டது மோட்ச தீபம்!

யாழ்.நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் நிர்வாகி குகஸ்ரீ குமார தாஸ மாப்பாண முதலி யாரின் ஆத்மா இறை திருவடி சேரப் பிராத் தனை செய்து தில்லை சிதம்பரம் ஆலய தெற்கு கோபுரத்தில் நேற்று மோட்ச

2



## பெரும் துயரத்தைத் தந்துள்ளது மாப்பாண முதலியாரின் மறைவு

### இரங்கல் செய்தியில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



இலங்கையில் உள்ள பிர தானமான மதவழிபாட்டுஸ்தலங் களில் ஒன்றாகிய நல்லூர் கந்த சுவாமி கோயிலின் நிர்வாக அதி காரியும் அறங்காவலருமான இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் காலமாகிவிட்டார் என்ற செய்தி பெரும் துயரத் தைத் தந்துள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினருமான ஜனா திபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள இரங் கல் செய்தியில் மேலும் குறிப்பி டப்பட்டுள்ளதாவது:-

1964ஆம் ஆண்டு

2

## மேலும் 29 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 29 பேர் கொரோனா வைரஸ் தொற் றால் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல்

2

## கிளிநொச்சி வைத்தியசாலைக்குள் புகுந்து வாள்வெட்டுக் குழுவினர் பெரும் அட்டகாசம்

### ஏற்கனவே வாள்வெட்டுக்கு இலக்காகியவர் மீது மீண்டும் தாக்குதல்

(ந.லோகதயாளன்)

வாள்வெட்டில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டு இருந்தவரை வைத்தியசா லைக்குள் புகுந்து கும்பல் ஒன்று சரமாரியாக வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவரு வதாவது.

வாள்வெட்டு சம்பவம் ஒன் றுக்கு இலக்காகிய ஒருவர் கிளி நொச்சி மாவட்ட பொது வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டிருந் தார். அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்காக

2

## நேற்று தொற்று 726

இலங்கையில் நேற்று 726 பேர் கொரோனா வைரஸ் தொற் றுடன் அடையாளம் காணப்பட் டுள்ளனர் என்று

2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆம். கண்டியில் புதிய ஆயர் நியமனம் வடக்கு, கிழக்கில் நிச்சயம் மாற்றங்களைத் தரும் என்பதுதான் என் கணிப்பு.

கத்தோலிக்க மத பீடக் கட்டமைப்பின் படி இலங்கை முழுவதும் ஒரே ஆயர் பேரவையின் கீழ்தான் – கொழும்புப் பேராயரே வழிகாட்டியதாக இருக்க – செயற்படுகின்றது.

வடக்கு, கிழக்கில் தமிழ் மொழி மூல வழிபாட்டு முறைகளும், பண்பாடுகளும் வேறுபட்டு நிற்பதாலும், அந்த மக்களின் பிரச்சினைகள் தனித்துவமானவை என்பதாலும், அவற்றைக் கையாள வடக்கு, கிழக்கின் மறை மாவட்டங்களை – யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை நான்கு மறை மாவட்டங்களை – உள்ளடக்கி தனியான ஆயர் மன்றம் இயங்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகின்றது.

யாழ்.ஆயராக வண. தியோகுப்பிள்ளை ஆண்டகை இருந்த காலத்திலேயே – சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் அப்போது வடக்கு, கிழக்கில் இருந்த மூன்று மறை மாவட்டங்களையும் ஒன்றிணைத்து தனியான ஓர் ஆயர் மன்றம் – பிரிவு – இயங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

ஆனால், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இப்போது அந்தக் கோரிக்கை வலுத்துள்ளது. ஏற்கனவே வடக்கு – கிழக்கு ஆயர்கள் தங்களுக்குள் கூடி ஒரு மன்றத்தை அமைத்துச் செயற்படுத்தி வருகின்றனர். ஆனால் அது இன்னும் வத்திகானினால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லை.

யுத்த காலத்தில் கூட வடக்கு, கிழக்கு மக்களின் தனித்துவமான பிரச்சினைகளைப் பற்றிக் கரிசனைப்படாமல், பெரும்பான்மையினரான தென்னிலங்கை மக்களின் பிரச்சினைகளையே இலங்கை ஆயர் பேரவை பெரும்பாலும் பிரதி பலித்து வந்தது என்றும் –

தமிழ்க் கத்தோலிக்கர்களினதும், தமிழ் மக்களினதும் அவலக் குரல் இலங்கை ஆயர் பேரவையால் சரிவர செவிமடுக்கப்படவில்லை என்றும் – கூட குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்தன.

எனினும் வடக்கு, கிழக்கு ஆயர்கள் மன்றம் தனியாக இயங்குவதில் கொழும்பு பேராயர் வண. மல்கம் ரஞ்சித் எதிர்ப்பு எதையும் காட்டவில்லை என்றும், மாறாக தமிழர்களின் நியாயமான நிலைப்பாடு என்ற கரிசனையோடு அக்கோரிக்கையை பரிவுடன் அவர் நோக்குகின்றார் என்றும் – விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

எனினும் இதுவரை கண்டிக்கான ஆயராக நீண்டகாலம் பணியற்றி வந்த வண.வியன்னி பெர்னாண்டோ இதற்கு – அதாவது வடக்கு, கிழக்கு ஆயர் மன்றத்து திட்டத்துக்கு – கடும் எதிர்ப்புக் காட்டி வந்தார் என்றும் கூறப்பட்டது.

இப்போது அவர் திருச்சபையின் ஆயர் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றமையால் வடக்கு – கிழக்கு ஆயர் மன்றம் உயிர்ப்புடன் இயங்குவதற்கு வாய்ப்புகள் பிரகாசமடைந்திருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

தமிழர்களுக்கு இது ஒரு நல்ல தகவல்தான்.

★ ★ ★

உலகில் அசேதன இரசாயனங்கள், உரங்களை முழு அளவில் தடை செய்து ஒதுக்கிய – தனித்து சேதனப் பொருள்களை மட்டும், விவசாயத்தில் பயன்படுத்தும் – முதல் நாடு இலங்கை என்ற பெருமையை தனது நாடு விரைவில் ஈட்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் ஐ.நா. பொதுச் சபையில் தாம் ஆற்றிய உரையில் பீற்றிக்கொண்டார்.

ஆனால் உர வகைகள் இல்லாமல் தமது விவசாயத்தை முன்னெடுக்க முடியாது நாட்டின் விவசாயிகள் தலையில் அடித்துக் கொள்கின்றார்கள்.

தத்தமது பிரதேச விவசாயிகளின் நச்சரிப்பு, தொல்லை தாங்க முடியாது அரசின் பின்வரிசை எம்.பிக்கள் 52 பேர் ஒன்று சேர்ந்து ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு ஒரு கடிதத்தை அனுப்பி வைத்திருக்கின்றார்கள் – உரப் பாவனைத் தடையைத் தளர்த்தும்படி.

ஐ.நா. பொதுச் சபையில் தாம் அறிவித்த வீம்பில் இருக்கும் ஜனாதிபதியின் காதில் இந்த எம்.பிக்களின் கோரிக்கையோ, விவசாயியின் அவலக் குரலோ வீழப்போவதிலலை. பாவம் விவசாயிகள்...!

– மின்னல் –

## கடலட்டைப் பண்ணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அறிவுறுத்தப்பட்டது. இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 240 மீனவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

இவ்வாறு விண்ணப்பித்த 240 பேருக்கும் தலா ஒரு ஏக்கர் வீதமே வழங்கப்படவுள்ளது. இருந்தபோதும் இவ்வாறு இனம் காணப்பட்ட 19 இடங்களிலும் அளவீடு செய்யப்படவுள்ள பிரதேசங்களின் அளவு 2 ஆயிரத்து 500 ஏக்கரைத் தொடுவதனால் எஞ்சிய இடங்கள் எவருக்கு வழங்கப்படவுள்ளன என்ற ஐயம் எழுப்பப்படுகின்றது.

இதேநேரம் இவ்வாறு இனம் காணப்பட்டுள்ள கொழும்புத்துறை, பாஷையூர், அரியாலை, மண்டைதீவு, குருநகர், நாவாந்துறை, வேலணை, சாட்டி, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, நெடுந்தீவு போன்ற பகுதிகளில ஏற்கனவே 2 ஆயிரத்திற்கும் மேறபட்ட கலங்கட்டி பாடுகள் உள்ளன. கடலட்டைப் பண்ணைகள் வந்தால் அவற்றை அங்கிருந்து அகற்றுமாறு கூறப்படலாம். இதனால் இந்த தொழிலை மேற்கொண்ட மீனவர்கள் பெரும் வாழ்வாதார அவலத்தை சந்திக்கும் நிலைமை உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

முதலாவதாக நாளைய தினம் மண்டைதீவு பகுதியிலேயே அளவீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

## மாப்பாண முதலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கோயில் நல் லூர்க் கந்தசுவாமி கோயில். இங்கு இன, மத பாகுபாடு பாராட்டப்பட்டு யாரும் கண்டதில்லை. இறைவன் சந்நிதியில் அனைவரும் ஒன்றே என்ற உண்மையை நாம் இங்கு காண முடியும். நம் தாய்த்திருநாட்டின் உலகறிந்த அடையாளம் இந்தப் பெருமைமிகு ஆலயம். அருள் ஒளி வீசும் அற்புத ஆலயம்.

நம் தேசத்துக்குப் பெருமை தரும் வகையில், உலகப்புகழ் பெற்ற நல்லைக் கந்தன் ஆலயத்தின் நிர்வாகத்தைச் சிறப்புற முன்னெடுத்தவர் குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார். அவருக்குக் கந்தப்பெருமானின் அருட்கடாட்சம் எப்போதும் துணை நின்றது. அதுவே குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரை செயலாற்றல் மிக்க அடியவனாக்கியது. அப்படிப்பட்ட மகோன்னத புருஷரின் இழப்பு, நம் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியுற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் – என்றுள்ளது.

## மேலும் 29 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை 13 ஆயிரத்து 296 பேர் கொரோனாத் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 29 சாவுகளில் 18 ஆண்களும், 11 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 4 ஆண்கள், 2 பெண்கள் என 6 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 23 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 14 ஆண்களும், 9 பெண்களும் அடங்குகின்றனர்.

## நல்லாட்சி மீட்டெடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசு நாட்டை இருளை நோக்கிக் கொண்டு செல்கின்றதே அன்றி, வெளிச்சத்தை நோக்கிக் கொண்டு செல்லும் அடையாளத்தைக் காண முடியவில்லை.

சௌபாக்கியத்துக்குப் பதிலாக அரசு அசௌபாக்கியத்தை மாத்திரமே நாட்டுக்கு மீதம் வைத்துள்ளது.

ஒரு புறம் வேலைவாய்ப்பின்மை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தொழில் வாய்ப்புகள் இன்றி இளைஞர், யுவதிகள் கஷ்டத்தில் உள்ளனர். மறுபுறம் உழவர்கள் செய்வதறியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றார்.

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 25 ஆயிரத்து 663 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 447 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 79 ஆயிரத்து 629 ஆக உயர்வடைந்துள்ளது.

## கிளிநொச்சி வைத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவர் சத்திர சிகிச்சைகூடத்துக்கு முன்பாகக் காத்திருக்க வைக்கப்பட்டிருந்தார்.

அந்நிலையில் , வைத்தியசாலைக்குள் வாளுடன் புகுந்த மூன்று பேர் அடங்கிய கும்பல் ஒன்று, சத்திர சிகிச்சைக் காகக் காத்திருந்த நபர் மீது சரமாரியாக வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டது.

நெஞ்சு மற்றும் இரு கைகளிலும் காயங்களுடன் குறித்த கும்பலிடம் இருந்து தப்பித்து அவர் சத்திர சிகிச்சை கூடத்தினுள் ஓடியதால் வாள்வெட்டுக் குழுவினர் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் கிளிநொச்சி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## பெரும் துயரத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆலயத்தினுடைய அறங்காவலராக பொறுப்பெடுத்த காலம் தொடக்கம் தற்போதுவரை ஆலயத்தை நிர்வகித்து வருவதுடன் அசாதாரணமான காலங்களிலும் நெருக்கடியான காலங்களில் நிர்வாகத்தை குறைவின்றி நடத்தி கடமை, கண்ணியம் கட்டுப்பாடு, ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்ற கொள்கைகளை தொய்வின்றி நிறைவேறும் உதாரண புருஷராக அவர் திகழ்ந்தார்.

மிகப்பிரதானமான ஆலயத்தின் தலைவராகவும் உரிமையாளராகவும் இருந்தும் தமக்கென்று எந்தவித முக்கியத்துவமான சடங்கு சம்பிரதாயங்களோ தவிர்த்து ஆலயத்துக்கு வரும் பக்தர்களுடன் பக்தனாகவும் இறைவன் முன் அனைவரும் சமம் என்ற அந்த உன்னத நிலையை மக்களுக்கு எடுத்துக்காட்டுவதாக இருந்ததும் அவரின் பரந்த மனதை எடுத்துக்காட்டியதும் ஆகும்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் பொதுமக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் – என்றுள்ளது.

## சிதம்பரம் தெற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தீபம் ஏற்றப்பட்டுள்ளது.

இதை எடுத்தியம்பும் காணொலிகளும் படங்களும் இணையதளங்களில் நேற்றிரவு பதிவேற்றப்பட்டிருந்தன.

## யாழ்.நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்றுக் காலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று காலை 10 மணிக்கு அவரது நல்லூர் இல்லத்தில் அமைதியான முறையில் இடம்பெறவுள்ளது என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்

1929ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் திகதி பிறந்த அவர் தனது 92 ஆவது அகவையில் காலமானார்.

1964ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி முதல் இதுவரை நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரியாக அவர் சேவையாற்றினார்.

## கண்டி ஆயராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆயர் வண.ஜோஸப் வைனி பெர்னாண்டோவின் பணி ஓய்வை ஏற்றுக்கொண்ட பாப்பாண்டவர் திருத்தந்தை பிரான்சிஸ், அம்மறைமாவட்டத்திற்கு, சிலாபம் மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றிவரும் ஆயர் வண. வலன்ஸ் மெண்டிஸை நேற்று நியமித்துள்ளார்.

1958 ஆம் ஆண்டு கொரலவிலவில் பிறந்த ஆயர் வலன்ஸ் மெண்டிஸ், 1985 ஆம் ஆண்டு அருள்பணியாளராகவும், 2005 ஆம் ஆண்டு சிலாபம் மறைமாவட்ட வாரிசு ஆயராகவும் திருநிலைப்படுத்தப்பட்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ள இவர், அப்பல்கலைகழகத்தில் மெய்யியல் துறையில், பகுதிநேரப் பேராசிரியராகவும் பணியாற்றியிருக்கிறார். இத்தாலியம், ஜெர்மன், இலத்தீன், ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் இவருக்குத் தெரியும்.

இலங்கையின் தேசிய மெய்யியல் குருத்துவ கல்லூரியின் முதல் இயக்குநராக நியமிக்கப்பட்ட ஆயர் வலன்ஸ் மெண்டிஸ், இலங்கை ஆயர் பேரவையின் பல்வேறு பணிக்குழுக்களின் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.

1886 ஆம் ஆண்டு செப்டம்பர் முதலாம் திகதியன்று உருவாக்கப்பட்ட கண்டி மறைமாவட்டத்தில் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கத்தோலிக்கர் உள்ளனர்.



# வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் கூட்டமைப்பிடம் உள்ளன

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு



வடக்கு - கிழக்கிலுள்ள வளங்களை வைத்துக் கொண்டு அந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தக்கூடிய வழிமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

நாட்டை நடத்திச் செல்ல வருமானம் அதிகமாக இருக்கவேண்டும். செலவுகுறைவாகஇருக்கவேண்டும். சாதாரணமாகக் கூறுவது என்றால் நாட்டில் பணம் இருக்க வேண்டும்.

உலகில் ஷ்டீவ் ஜொப்ஸ். பில்கேட்ஸ், ஜெக் மார்க் போன்ற மில்லியனர்கள், பில்லியனர்கள் தமது திறமையால், உழைப்பால் முன்னேறி வந்தவர்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால், எமது நாட்டில் மில்லியனர்கள் அதிகளவில் உள்ளனர்.

திருட்டுகளின் ஊடாக மில்லியனர்கள் ஆனவர்கள் உள்ளனர். அவர்களின் திருட்டுகளுக்கு உதவி செய்த அரசியல்வாதிகள் உள்ளனர். திறமையால் முன்னேறியவர்களும் இருக்கின்றனர்.

எனினும், அரசியல்வாதிகள் உதவியுடன் பணம் சம்பாதித்தவர்களே அதிகளவானவர்கள் உள்ளனர். அண்மைய காலங்களை எடுத்துக்கொண்டால் ஒரு வருடத்துக்குள் பில்லியன் கணக்கில் இலாபம் பெற்ற தனியார் நிறுவனங்கள் உள்ளன. அவர்களுக்கு அவ்வாறு முடியும் என்றால், அரசுக்கு வருமானம் குறைவடைந்தமை தொடர்பில் அரசாங்கம் தேடியறிய வேண்டும்.

அரசு வழங்கிய வரிச் சலுகைகள் காரணமாக பொது மக்களை விட நிறுவனங்களே அதிகளவில் நன்மை பெற்றன. இன்று சீமெந்து, பால் மா, காஸ் உள்ளிட்டவற்றுக்கான கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டுள்ளன. சீனி மோசடி, வெள்ளைப்பூடு மோசடி என்று மோசடிகளை அடுக்கிக்கொண்டே செல்லாம்.

நான் விமர்சிக்கவில்லை. வரிச் சலுகை வழங்கப்படுவதால் சாதாரண மக்கள் மீதே தாக்கம் செலுத்துகின்றது. பாரிய நிறுவனங்கள் பாதிக்கப்படுவதில்லை.

எனவேதான், பொதுமக்களுக்கு நன்மை பெற்றுக் கொடுக்கும் வகையிலான வரிச்சலுகை முறையினரை அறிமுகப்படுத்துமாறு நாங்கள் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றோம்.

காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா வழங்க 2019 ஏப்ரல் பட்ஜட்டில் முன்மொழியப்பட்டது. இன்றுவரை 153 குடும்பங்களுக்கு மாத்திரம் அந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

அந்தக் கொடுப்பனவும் 2019 டிசெம்பர் 31ஆம் திகதிக்குப் பிறகு வழங்கப்படவில்லை. காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறிய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

எனினும், அதனை செய்யும் வரை அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும். அதற்காக மரண சான்றிதழ் வழங்குவதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறியும் வரை இந்தத் தொகை அந்த மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

வடக்கு - கிழக்கில் உள்ள வளங்களை வைத்துக் கொண்டு அந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தக்கூடிய வழிமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பான எம்மிடம் உள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு - கிழக்கில் உங்கள் அருகில் வைத்திருந்த அந்த நபர்கள் செய்த மோசடிகள், திருட்டுகள் காரணமாகவே நீங்கள் பாரிய தோல்வியை அந்தப் பகுதிகளில் சந்திக்க நேரிட்டது. இன்றும் அதுதான் நடக்கப் போகின்றது.

நிதியமைச்சரின் கட்சியைச் சேர்ந்த மூவரின் பெயரில் மட்டக்களப்பு மண் அகழ்வு அனுமதிப்பத்திரம் உள்ளது. பீ.சந்திரகுமார் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர்.

அடுத்தது, சதாசிவம் மயூரன் வியாழேந்திரனின் தம்பி, அடுத்தது, சிவநேசத்துரை சந்திரகாந்தன். இந்த தகவல்களை நாடாளுமன்றில் தான் நான் பெற்றுக் கொண்டேன்.

நாங்கள் நிதியமைச்சருடன் வடக்கு -கிழக்கு அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் இணைந்து செயற்பட தயாராக உள்ளோம். எம்மிடம் சிறந்த முனமொழிவுகள் உள்ளன. மாவட்ட ரீதியில் சில முன்மொழிவுகளை கூட எம்மால் வழங்க முடியாது உள்ளது. எனவே எமது திட்டங்களை முன்மொழிய எமக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தாருங்கள்.- எனக் குறிப்பிட்டுள்ளார்.






மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா
இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
திருமண சேவை
077 197 1667
077 316 4796

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 17.8.1983 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - அனுசம் 3
கி.பா - 48 செவ் - சூரி 3 இல்
தகைமை - computer science
தொழில் - accoutant italy PR
எதிர்பார்ப்பு - A/L மணமகள் இலங்கை வந்து திருமணம் செய்வார்.

பிறந்த திகதி -1987.01.03 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அவுட்டம்4
கி.பா - 11 செவ் - 9இல்
தகைமை - G.C.E. A/L தொழில் - France PR
எதிர்பார்ப்பு -படித்த மணமகள் இலங்கை வந்து மணம்முடிப்பார்

பிறந்த திகதி - 03.10.1988 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் -திருவாதிரை3
கி.பா - 92 செவ் - 8 இல்
தகைமை - கல்வியியல் கல்லூரி தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் தேவை

பிறந்த திகதி - 1984.07.16 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அவுட்டம்3
கி.பா -37 செவ் - 6இல்
தகைமை -G.C.E. A/L தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - UK + ceylon மணமகள் தேவை

பிறந்த திகதி - 1989.10.08 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தராடம்1
கி.பா - 30 செவ் / சூரி - 9இல்
தகைமை -HND.IT தொழில் - post master
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 1985.04.03 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூரம் 1
கி.பா - 16 செவ் - 04இல்
தகைமை - GAS ENG தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - UK or ceylon மணமகள் தேவை.

பிறந்த திகதி - 1989.09.10 மதம் - இந்து
ஜாதி -இசை வேளாளர் நட்சத்திரம் - பூராடம்
கி.பா - 31 செவ் - சூரி 9
தகைமை - B.com
தொழில் - Development officer
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகள்

பிறந்த திகதி -1991.12.06 மதம் - இந்து
ஜாதி - இசை வேளாளர் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 22 செவ் - சூரி 9இல்
தகைமை - G.C.E. A/L தொழில் - இசைத் தொழில்
எதிர்பார்ப்பு - வெளிநாடு + உள்நாடு மணமகள்

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 19.12.1995 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - விசாகம் 1
கி.பா - 17 செவ் / சூரி
தகைமை -software ENG. தொழில் - company
எதிர்பார்ப்பு - பட்டதாரி UK canada USA மணமகன்

பிறந்த திகதி - 18.09.1994 மதம் - இந்து
ஜாதி - p பகுதி நட்சத்திரம் - சதயம்
கி.பா - 29 செவ் / சூரி 8இல்
தகைமை - B.B.M தொழில் - அரசசேவை
எதிர்பார்ப்பு - அரச சேவைப்பட்டதாரி மணமகன் தேவை

பிறந்த திகதி - 1986.02.17 மதம் - இந்து
ஜாதி - p பகுதி நட்சத்திரம் - ரோகினி
கி.பா - 22 செவ் சூரி - 6இல்
தகைமை - B.com HNDA தொழில் - Developement officer
எதிர்பார்ப்பு - அரச சேவை தனியார் மணமகன் தேவை

பிறந்த திகதி - 26.11.1992 மதம் - இந்து
ஜாதி - visvagulam நட்சத்திரம் - மூலம்
கி.பா - 72 செவ் /சூரி - 7 இல்
தகைமை - B.Sc தொழில் - அரசசேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 07.11.1992 மதம் - இந்து
ஜாதி - V பெண் + குருகுலம் நட்சத்திரம் - உத்தராட்டாதி
கி.பா - 56 செவ்/ சூரி - 9 இல்
தகைமை - B.B.M தொழில் - Bank officer
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 1992.09.03 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - விசாகம் 4
கி.பா - 20 செவ் - 12இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன் தேவை

பிறந்த திகதி - 08.12.1990 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 24 செவ் - 8இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor Eng மணமகன்

பிறந்த திகதி - 16.04.1991 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பரணி
கி.பா - 22 செவ் - 2இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor Eng மணமகன்



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசியல் குத்துக்கரணங்கள்

ஒரு கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர், அற்ப, சொற்ப பவிசுகள், வருமானங்களுக்காகக் குத்துக் கரணம் அடிக்கும் அரசியல் கலாசாரம் இலங்கையின் அரசியலையே நாறடிக்கும் விவகாரமாக மாறிவருகின்றது.

இதில் முன்னணியில் இருப்பவர்கள் அனோகமாக முஸ்லிம் கட்சிகளைச் சேர்ந்தோர்தான். இப்படிக் கொள்கை நிலைப்பாட்டை இலகுவில் புரட்டிப் போட்டவர்கள் – போடுபவர்கள் – அவர்கள்தான். அதுவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் அரசியல் வரலாறை எடுத்துப் பார்த்தீர்களானால் அவரோடு அவரது கட்சியில் அரசியல் செய்தவர்களில் – எம்.பியானவர்களில் – அரைவாசிக்கு மேற்பட்டோர் இப்படிக் குத்துக்கரண 'கேஸ்கள்'தான்.

இப்போதும், தன்னுடன் கூட தனது கட்சியில் இருந்து நாடாளுமன்றுக்கு வந்த நான்கு எம்.பிக்களும் தன்னுடன் எதிரணியில் குந்திக்கொண்டு, அரசுக்குக் கூஜா தூக்கும் 'செம்பு காவிகளாக' இருப்பது கண்டு விசனிக்கும் நிலைமை அவருக்கு.

மஹிந்தவின் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் ஐ.தே.கட்சியின் பட்டியலில் போட்டியிட்ட அவரின் மு.காங்கிரஸ் கட்சி எதிரணியில் அமர்ந்தது. தனது பங்காளிக் கட்சியான முஸ்லிம் காங்கிரஸுக்கு தேசியப் பட்டியலில் இரண்டொரு இடங்களை வழங்கியது ஐ.தே.கட்சி. அந்த இடங்களில் ஒன்றுக்கு உரியவரைத் தெரிவு செய்வதில் முஸ்லிம் காங்கிரஸுக்குள் பெரும் வாதப் பிரதிவாதம். பிய்ச்சல் பிடுங்கல். ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாது முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தலையைப் பிய்த்துக் கொண்டது.

வேறு வழியின்றி தற்காலிகமாக – இடைக்கால ஏற்பாடாக – ஒருவருக்கு அந்தப் பதவியை வழங்குவது என்றும், கட்சி இறுதியாக ஒருவரைத் தீர்மானிக்கும் போது, தற்காலிகமாகத் தெரிவானவர் இராஜினாமாச் செய்து இடத்தை அவருக்கு விட்டுக் கொடுப்பது என்று முடிவானது. (கடந்த தடவை கூட அதே பிரச்சினை வந்தது. ரவூப் ஹக்கீம் நம்பிக்கைக்குரியவராகத் தமது சொந்தத் தமையனார் டாக்டர் ஹாபீஸுக்கு அந்தப் பதவியை வழங்கினார். 2015 இல் தெரிவான நாடாளுமன்றத்தில் முதலில் சுமார் ஆறு மாதங்கள் டாக்டர் ஹாபீஸே தேசியப் பட்டியல் எம்.பியாக இருந்தார். பிறகு கட்சி தௌபீக் என்பவரை தேசியப் பட்டியல் எம்.பியாகத் தெரிவு செய்ய, டாக்டர் ஹாபீஸ் தமது பதவியை இராஜினாமச் செய்து அவருக்கு இடமளித்தார்.)

ஆனால், 2006இல் தமது நம்பிக்கைக்குரிய – செயலாளர் போன்று செயற்பட்ட – ஹுசைன் பைலா என்பவருக்கு ஹக்கீம் தற்காலிகமாக அந்தப் பதவியை வழங்கினார்.

ஆனால் பைலாவோ, காலையில் நாடாளுமன்றத்தில் தேசியப் பட்டியலில் பதவியை ஏற்று எதிரணியில் அமர்ந்துவிட்டு, அன்று மாலையே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அளித்த வெளிவிவகாரப் பிரதியமைச்சர் பதவியை ஏற்று அரசுத் தரப்புக்குக் குத்துக் கரணம் அடித்து 'பல்டி அடித்தார் பைலா' என்ற அவப்பெயருக்கு ஆளானார். அந்தப் பதவிக் காலம் முழுவதும் அவரை 'பல்டி' பைலா என்ற அடைமொழியுடனேயே ஊடகங்கள் குறிப்பிட்டன.

இப்போது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமனம் பெற்று, இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தின் போது கட்சிக் கட்டுப்பாட்டை மீறி அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்ட டயானா கமகே அம்மணிக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது கட்சி. அவரை கட்சியிலிருந்து வெளியேற்றிருப்பதாக கட்சி வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இந்த விவகாரம் நிச்சயம் நீதிமன்றுக்குச் செல்லும். தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தில் ஒரு வருடம்தான் இப்போது பூர்த்தியாகியுள்ளது.

டயானா கமகே விவகாரம் உயர்நீதிமன்றத்தில் சர்ச்சைக்குரியதாக இழுபட்டாலும், இந்த நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்துக்குள் அதற்கு முடிவு வர வாய்ப்புண்டு – ஒரு நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தின் ஆரம்பத்திலேயே இவ்விவகாரம் மன்றுக்குச் செல்வதால்.

டயனா கமகே விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்பு சுவாரசியமாக – நமது நாட்டின் அரசியல் செல்நெறியை சட்ட முறைமை மூலம் ஒழுங்குபடுத்துவதாக – அமையும் என எதிர்பார்க்கலாம்.

## ஸ்ரீமான் குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் மறைவுக்கு செஞ்சொற்செல்வர் அஞ்சலி



வரலாற்றுப் பெருமைமிக்க நல்லூர் கந்தப்பெருமானின் அறங்காவலராக கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அரும்பணி ஆற்றிய பெருமகன் ஸ்ரீமான் குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் பிரிவு குறித்து மிகுந்த கவலையடைகின்றேன். உலகமே வியக்கும் வண்ணம் நல்லைக்கந்தன் ஆலயத்தை சீரிய வழியில் ஆற்றுப்படுத்திய ஆளுமை மிக்க சமயக் காவலரை சைவ உலகம் இழந்துவிட்டது.

– இவ்வாறு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் நல்லூர் கந்தசுவாமி கோவில் அறங்காவலர் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் பிரிவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

எவ்வித ஆடம்பரமும் இன்றி பக்தரோடு பக்தராக நின்று ஆலயத்தைக் கட்டி வளர்த்த பெருந்தகையை இனி எங்கே காண்போம்.

தனது சகோதரன் அமரர் சண்முகதாஸ் மாப்பாண முதலியார் காலமான நாள் முதல் தனது உத்தியோகப் பதவி யாவற்றையும் துறந்து முழுநேரத் தொண்டராகத் தன் வாழ்வை அர்ப்பணித்த பெருமகன்.

எவருக்கும் அஞ்சாது தன்மகத்துவம் மிக்க ஆளுமையால் பல்வேறு திருப்பணிகளை நிறைவேற்றிய இப்பெருந்தகையின் சாதனைகளைச் சொல்லி முடிக்க முடியாது.

நல்லூர்க் கந்தன் ஆலய ஒழுங்குகளை எவர் வருகைக்காகவும் மாற்றி அமையாது தெய்வ சந்நிதானத்தில் அனைவரும் ஒன்றே என்ற அற்புதக் குறிக்கோளைத் தனது இறுதி மூச்சுவரைக் காப்பாற்றியவர்.

'கண்ணை இமை காப்பதுபோல்' ஒவ்வொரு விநாடியும் ஆலய ஒழுங்குகளை அவதானித்து அரிய பணி ஆற்றிய இப்பெருந்தகையை நல்லூர்க் கந்தப் பெருமான் தனது திருவடிக்கு அழைத்துவிட்டார்.

என்செய்வோம். அவரது தூயபணியை நல்லூர் மரபுப்படி இளைய எஜமானார் தந்தையின் வழியில் நெறிப்படுத்தப் பிரார்த்திப்போம். எல்லாத் திருக்கோயிலிலும் நல்லூர்க் கந்தனின் சிறப்பைப் பின்பற்ற வைக்க ஒப்பற்ற தலைமகனை அனைவரும் மீள நினைந்து பிரார்த்தித்து வழி அனுப்பி வைப்போம். –என்றுள்ளது.

## நல்லூர் கந்தன் தர்மகர்த்தா மறைவு சைவத்தமிழ் உலகில் பெருவெற்றிடம்!

### இந்துசமயப் பேரவை இரங்கல்

இலங்கைத் திருநாட்டின் வரலாற்று புகழ்பெற்ற ஆலயங்களிலொன்றான யாழ்ப்பாணம் நல்லூர்க்கந்த சுவாமி கோயிலில் 10 ஆவது தர்மகர்த்தா இரகுநாதமாப்பாண முதலியார் குமாரதாஸமாப்பாண முதலியார் மறைவு சைவத் தமிழுலகில்பெருவெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்துசமயப் பேரவையின் தலைவர் ஈசான சிவ சக்தி கிரீவன்.

அவரது அஞ்சலி செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

அந்நியர் ஆட்சியில் அழிக்கப்பட்ட ஆலயத்தை மீண்டும் எழிச்சியுற வைத்த பெரும் பங்களிப்பு அமரரின் வழித்தோன்றல்களைச் சார்ந்தது. அதன்வழி நின்று இந்த ஆலயப் புதுப் பொலிவுக்கு அமரர் ஆற்றிய பணி அளப்பரியது.

இந்த ஆலய பூசைவழிபாட்டு நியமங்களும் நடைமுறைகளும் ஏனைய ஆலய நிர்வாகங்களிடம் செல்வாக்குச் செலுத்துவதாகவே காணப்படுகிறது.

ஆரவாரமற்றமுறையில் மேற்கொள்ளும் தர்மப்பணிகள் பல. ஆலயங்கள் போர்ச் சூழலில் தாக்கப்படுவதைத் தடுப்பதற்காகவும் சகல ஆலயங்களைப் பாதுகாப்பதற்காகவும் இந்து சமயப் பேரவை ஆரம்பித்தபோது எமது பணிகளோடு இணைந்து ஸ்தாபக அங்கத்தவராகச் செயற்பட்டமை வரலாற்றில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

அன்னார் ஆத்மா சண்முகப்பெருமானுக்கு வேறில்லாத நடராஜப்பெருமான் பாதங்களின் கீழ் இன்புறப் பிரார்த்திப்பதோடு அன்னார் குடும்பத்தினருக்கும் அன்பர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

## வவுனியாவில் காணாமற்போன மாணவன் புதுக்குடியிருப்பில்!

வவுனியாவில் காணாமல்போனான் என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட 17 வயது மாணவன் புதுக்குடியிருப்பு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளான் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வந்த மணிவண்ணன் சிவானுஜன் என்ற 17 வயது மாணவன் கடந்த வியாழக்கிழமை காலை வீட்டில் இருந்து சென்ற நிலையில் காணவில்லை என மாணவனின் தந்தையால் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. மேற்படி முறைப்பாடு தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில், மேற்படி மாணவன் புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள பஸ் நிலையத்தில் நிற்கிறார் என மாணவனின் நண்பனுக்கு ஓட்டோ சாரதி ஒருவர் மூலம் தெரிவிக்கப்பட்டதையடுத்து, மாணவனின் பெற்றோருக்கு மேற்படி தகவல் தெரியப்படுத்தப்பட்டது.

அத்துடன், மாணவன் வீட்டில் இருந்து முரண்பட்டுக் கொண்டு வந்துள்ளார் என ஓட்டோச் சாரதி அறிந்த நிலையில், மாணவனை புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.


அங்கு சென்ற மாணவனின் பெற்றோர், புதுக்குடியிருப்பு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து மாணவனை பொறுப்பேற்றுக் கொண்டமையுடன், இது தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டார் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கிளிநொச்சியில் நடைபெற்ற 'அனைத்துக்கும் முன் பிள்ளைகள்' எனும் தொனிப்பொருளிலான சர்வதேச சிறுவர் தின நிகழ்வில், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிமல் நிசந்த டி.சில்வா கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார்.

நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) பகல் 11 மணிக்கு கிளிநொச்சி மாவட்டத்திற்கு விஜயம் செய்து, மேற்படி நிகழ்வில் கலந்துகொண்ட அவர், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான உதவித் திட்டங்களை வழங்கிக் கௌரவித்தார்.

# உளநலம் பேணி ஆரோக்கியமாக வாழ்வோம்




- கலாநிதி.க.கஜவிந்தன் -
(சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளர்,
மெய்யியல், உளவியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

**உலக உளநல தினம், இன்று ஒக்ரோபர் 10ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. அதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

உலக உளநல தினம், ஒன்று ஒக்ரோபர் 10ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு உலக மனநல தினத்தின் கருப்பொருளைத் தேர்வு செய்ய உதவிய உளநலத்திற்கான கூட்டமைப்பு, இந்த வருட உளநல நாள் கருப் பொருளை 'சமனற்ற உலகில் உளநலம்' என்றவாறாக குறிப்பிட்டுள்ளது. உளநல ஆரோக்கியத்திற்கான சேவைகளுக்கான அணுகு முறைகள் சமமற்றதாக இருப்பதை முன்னிலைப்படுத் துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று கூறுகி றது. மனநோயால் பாதிக்கப்பட்ட பலர் தங்களுக்கு உரிய மற்றும் தகுதியான சிகிச்சையைப் பெறுவ தில்லை என்று அது மேலும் கூறுகிறது. அவர்களின் குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்களின் சேவைக ளில் அவர்கள் பாகுபாட்டை அனுபவித்து வருகின்ற னர்.

கொவிட் - 19 தொற்று நோய் காரணமாக உலக லாவிய ரீதியில் உளநலப் பாதிப்பு நிலைமையை அதி கமாக்கியுள்ளது. உளநல ஆரோக்கிய நிலைகளின் புதிய உளநோயாளிகளை அதிகரிக்கின்றமையுடன் ஏற்கனவே உளப்பாதிப்புக்களையும் அதிகரிக்க வைத் துள்ளது. இது உளநல சேவைகளுக்கு குறிப்பிடத்தக்க இடையூறுகளை உருவாக்கியுள்ளது. நீண்டகால மாக உளப்பாதிப்புக்களால் அதிக பிரச்சினைகளை எதிர்கொண்டவர்கள் கொவிட் - 19 இன் தொற்றால் சிகிச்சைக்கான அணுகல் முறைகளின் ஒழுங்கீனத் தால் உளநல பாதிப்புகளால் மேலும் அதிகளவாக பாதிக்கப்படுகின்றனர்.

நம் வாழ்வை சிறப்பாக வாழ நமக்கு நல்ல உடல் நலனும், உளநலனும், அவசியமாகும். உடல் நலம் பெறவும், உடலில் ஏற்படும் பிரச்சினைகளைச் சரிசெய்து கொள்ளவும் நாம் மருத்துவரை அணுகுகிறோம். அதேபோல் உளநலம் பெறவும், மனதில் ஏற்படும் பிரச்சினைகளைச் சரி செய்து கொள்ளவும் உளவியல் ஆலோசகர்களையும் உளநல மருத்துவர்களையும் நாடுவது அவசியமாகும். எனவேதான் உலக சுகாதார நிறுவனம் ஒக்ரோபர் 10ஆம் திகதியை உலக உளநல தினம் என அறிவித்துள்ளது. உளநலத்தின் முக்கியத் துவம் பற்றியும், உளநல பணியாளர்கள் பற்றியும் அனைவருக்கும் தெரியப்படுத்துவதே இந்நாள் கொண் டாடப்படுவதன் முக்கிய குறிக்கோளாகும்.

ஆரோக்கியமான மனிதர் என்பவர், உடல் ஆரோக் கியம் மட்டுமன்றி உளநலமும் பெற்றிருத்தல் அவசி யமாகும். ஆரோக்கியம் என்ற தற்கால விளக்கம் உடலில் முறையான அல்லது சீரான இயக்கத்தை மட்டும் குறிக்கவில்லை. அது மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தவல்ல மனத்தின் தன்மையையும் உள் ளடக்கியதாகும். உடல் நலத்தைப் பாதுகாக்கவும், சமூ கத்தில் திறமையுடன் செயற்படவும் இன்றியமையா தது மனநலமாகும்.

காய்ச்சல், மலேரியா, டெங்கு, நீரிழிவு நோய் போன்ற உடலில் ஏற்படும் பிரச்சினைகள் போன்றே மனதிலும் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆனால் எம்மில் பலர் உளநலம் குறித்து அக்கறை காட்டுவதே இல்லை. அவர்கள் உடல் நலத்தை மட்டுமே முழு ஆரோக்கியம் என கருதுகின்றார்கள். ஆனால் இரண் டும் சேர்ந்தே பெறப்படுவது முழுமையான ஆரோக் கியமாகும். அந்த வகையில் உளநலத்தையும் பேணிப் பாதுகாப்பது அவசியமாகும். எவ்வாறு இந்த உடலில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு சிகிச்சை இருக்கிறதோ, அதே போல் மனதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் சிகிச்சைகள் இருக்கின்றன.

உடலும் மனமும் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டவை. உடலுக்கு ஏதாவது ஏற்பட்டால் அது மனதைப் பாதிக்கும். அதே போல் மனதுக்கும் ஏதாவது ஏற்பட்டால் அது உடலைப் பாதிக்கும். உதாரணமாக காய்ச்சல் ஏற்பட்டால், மனம் சோர்ந்து போய்விடுகிறது. மனதில் ஏற்படும் பிரச்சினைகள் உடலின் எல்லாப் பாகங்களையும் சென்றடைகின்றன. மனப்பதற்றத்தில் இருப்பவர் யாரையும் நேருக்கு நேராக பார்த்துப் பேசத் தயங்குவார். வியர்த்தல், இதயத்துடிப்பு அதிகரித்தல், சுவாச வீதம் அதிகரித்தல், சிறுநீர் கழிக்க உந்துதல் போன்ற பல விளைவுகளை மனதில் ஏற்படும் பதற் றத்தால் உடலில் விளைகின்றன. மேலும் நமது செயல் திறன் மிக அதிகமாக நமது மனநலத்தை சார்ந்திருக் கின்றது. ஆகவே நமது தினசரி வாழ்க்கையில் வேலை களை கவனமுடன் சிறப்பாக செய்ய நல்ல உளநலம் அவசியமாகும்.

இந்த போட்டி உலகத்தில் எல்லோருக்கும் உளவியல் உதவி அவசியமாகும். ஒவ்வொரு உளப்பிரச்சினைக் கும் தனித்தனியாக முறையான மருந்துகளும், விஞ் ஞான ரீதியான உளவியல் சிகிச்சைகளும் வந்து விட்டன. ஓர் உளவியல் ஆலோசகரால் மூன்று பரிமா ணங்களில் உதவ முடியும்.

1. பிரச்சினையை சரி செய்ய
2. பிரச்சினைகள் வருவதைத் தடுக்க
3. உங்கள் வாழ்வை மேலும் வளமானதாக ஈர்க்க

பிரச்சினைகளைச் சரி செய்யும் முதல் பரிமாணத் தில் இரண்டு உண்டு

1. தினசரி வாழ்வில் எழும் பிரச்சினைகளை சரி செய்வது
2. உளநோய்களுக்கு சிகிச்சை அளிப்பது

மேலும் கோபத்தை கட்டுப்படுத்த முடியாமை, குடும்பப் பிரச்சினைகள், மணவாழ்வில் பிரச்சினை கள், வேலை செய்யும் இடத்தில் அடிக்கடி எழும் பிரச் சினைகள், நட்புவட்டத்தில் கொள்ள முடியாமை, பாட



சாலை,வேலை, தொழில் செயற்பாடுகளில் பிரச்சி னைகள் போன்றவற்றைத் தினசரி வாழ்வில் எழும் பிரச்சினைகள் என வரையறுக்கலாம். இவ்வகைப் பிரச்சினைகளை எதிர்கொள்வோரின் உளநலன் பாதிப்புக்குள்ளாகின்றது. இதனை கவனிக்காது விடும் போது காலப்போக்கில் அவை உளநோயாக மாறிவிட வாய்ப்புண்டு. உடல் நோய்க்கு எவ்வாறு உடனே சிகிச்சை எடுத்துக் கொள்கின்றோமோ அது போன்றே உளப்பிரச்சினைகளுக்கும் உரிய முறையில் கவனம் செலுத்தி சிகிச்சை பெறவேண்டும். இல்லையேல் மனப்பதற்றம், மனச்சோர்வு, உளச்சிதைவு, ஆளு மைச்சிதைவு போன்ற உளநோய்கள் ஏற்பட வாய்ப் புண்டு. அவை மனித வாழ்வின் இயல்பு நிலையையே பாதிப்படையச் செய்கின்றன. எனவே உளநலத்திலும் அக்கறை காட்ட வேண்டியது இன்றியமையாதது.

மனிதர்கள் அனைவரும் அடிப்படையில் நல்ல




வர்கள், நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள், ஒவ் வொருவரும் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர் கள், தனித்தன்மை உடையவர்கள், ஆகவே ஒவ் வொரு தனிமனிதனின் பிரச்சினைகளும் மற்றவர் களின் பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டவை. ஒவ் வொருவரும் தங்களை தைரியமான வாழ்க்கையில் சவால்களை எவருடைய துணையின்றி தாங்களாகவே எதிர்கொள்ளும் சக்தி உடையவர்கள் என நம்பினாலும் சில சமயங்களில் மற்றவர்களிடம் உதவி பெறுவது என்பது நடைமுறை அவசியமாகிறது. எனவேதான் தனக்கு ஏற்படும் உளரீதியான பிரச்சினைகளைச் சரிசெய்துகொள்ள உரியமுறைகளை கையாள்வது அல்லது நாடுவது அவசியமாகும். இதன் மூலம், வாழ்க் கையை இனிமையாகவும் மகிழ்ச்சியாகவும் அமைத் துக் கொள்ள முடியும்.

எனவே தான் ஒவ்வொருவரும் தமது உடல் நலம் போன்று உளநலத்திலும் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும். உடல் நலத்தால் உளநலமும், உளநலத் தால் உடல் நலனும் பாதிக்கப்படுகின்றன என்பதை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். நோயின்றி ஆரோக்கியமாக வாழவேண்டும் என்றால் இரண்டையும் சரிவர பேணிப்பாதுகாப்பது அவசிய மாகும். சிக்மன் பிராய்ட் எனும் உளவியலாளர் மனிதனின் ஆழ்மனதின் நிலையில் உள்ள உணர் வுகளாலே நோய் நிலைகள் தோன்றுகின்றன என்றும், எல்லாவற்றுக்கும் நனவிலி மனம்தான் காரணம் என்றும் கூறுகின்றார். அத்தோடு தமிழில் கூட 'அகத் தின் அழகு முகத்தில் தெரியும்' என்பார்கள். உண்மை யில் உள்ளம் எவ்விதப் பிரச்சினைகளும் இன்றிக் காணப்படும் போது அதன் உண்மையான நிலையை முகத்தில் காட்டுகின்றது. அது போலத்தான் உள்ளமும் சந்தோசமாக இருக்கும் போதே எம்மாலும் சரியான முறையில் நாளாந்த செயற்பாடுகளை சரிவரச் செய்ய முடியும்.





- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 156

**406. பின்னர் ஏதும் பேசக்கூடியதாக இருந்ததா?**

1983 இன் கலவரங்கள் புலம்பெயரிலும் தமிழீழம் அமைத்தே ஆக வேண்டும் என்ற வெறியை ஆரம்பமாக்கியிருந்தது. அங்கிருந்தும் பலர் விடுதலை குழுக்களுக்கு ஆதரவாக புறப்பட்டு வந்தனர். அமிர்தலிங்கமும் கூட்டணியினரும் கூட அகதிகளாக தமிழ் நாடு சேர வேண்டிய கட்டம் வந்தது.

அவற்றை சாதகமாக, பாவிக்க, இந்திரா காந்தி அமிர்தலிங்கத்திற்கு தந்த அனுசரணையில், நியூயோர்க்கில் முன்னர் கூடி தமிழீழம் நிறுவுவதற்காக அமைக்கப்பட்ட தமிழீழ விடுதலை சபை, தொடர்ந்து கொண்டிருந்த முயற்சிகளால், அரசியல் கட்சிகள், புலம் பெயர் அமைப்புக்கள், விடுதலைக் குழுக்கள் எல்லோரையும் இணைத்து, ஒரு பொதுக்கட்டமைப்பில் தமிழீழம் நோக்கி போகவிரும்பினர்.

இதற்காக, முன் னையது போன்ற சம்மேளனத்தை திரும்பவும் நடத்த, டாக்டர் பஞ்சாட்சரம், சிறீதரன் போன்றோர், பலருடன், பிரபாகரன் உட்பட, பேசினார்கள். நாங்கள் கூட நாட்டிலும், லண்டனிலும், சென்னையிலும் விடுதலைப் புலிகளோடு தனிப்பட்ட முறையில் பேசினோம்.

அந்த சமயத்தில் இந்திரா காந்தியின் முன்னெடுப்பில், சர்வ கட்சிகள் வட்டமேசை மாநாட்டை ஜே.ஆர். நடாத்தி கொண்டிருந்தார்.

பிரபாகரனோ, ஈழத்தமிழரை தற்பொழுது பிரதிபலிக்கும் அரசியல் சக்தி, தமிழீழ விடுதலைப் போராளிகளே, அவர்கள் தான் அவர்களின் தலைவர்கள் என



அறிக்கைகள் தந்தும் 19 மே 1984 அன்று டாக்டர் பஞ்சாட்சரத்திற்கு அவைபற்றி கடிதம் ஒன்றை எழுதினார். அவர் அதில் விடுதலைக்கான எந்த ஒற்றுமையும் நாட்டில்விடுதலைப்போராட்ட குழுக்களுக்கிடையேதான் ஏற்பட வேண்டும். தமிழீழக் களத்தில் இருந்து தான் அதனை அவர்கள் பேச வேண் டும் என்றும் என்னுடன் பேசியவாறு, நிதிப்பற்றாக் குறையை சொல்லி தமிழீழ தேசிய இராணுவம் அமைக்க உதவிகள் செய்யுமாறு கேட்டார். அந்தக் கடிதத்தின் முழுச்சாரத்தையும் இணைத்துள்ளேன்.

அதன் பின் நடந்தவற்றையும் தலைமை பதவிகளுக்காக நடைபெற்ற அழிப்பு அட்டூழியங்களையும் ‘இந்திய ஒப்பந்தம் - ஒரு திசைநோக்கு’ என்ற தொடரில் விவரித்திருந்ததால் அவற்றுக்கு மீளப்போக வேண்டிய தேவையில்லை.

அவற்றிலிருந்து தொடர்ந்தவை, படிப்படியாக தமிழ் மக்களை, முள்ளிவாய்க்காலில் கொண்டு வந்து நிறுத்தி, ஸ்ரீலங்கா அரசு மக்களைப் பாதுகாக்கும் கடமை ஒரு நாட்டின் அரசாக தங்களுக்கு உண்டு என்று செய்த அட்டூழியங்கள் எல்லாம் நடந்தேறின.

**407. இவற்றின் தெளிவு என்ன?**

இந்தத் தொடரை தொடங்கும் பொழுதே தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ‘இனப்படு கொலையா? இனச்சுத்திகரிப்பா?’ என்ற கேள்வி வைக்கப்பட்டது. ‘இனப்படுகொலை தடுப்பு ஒப்பந்தத்தில்’ (Convention on Prevention of Genocide) சர்வதேச நாடுகள் மரபு முறையாக அதனை எப்படி அணுகுகின்றன என்பதனையும், ஓர் இனப்படுகொலையை முன்னேற்றிச்செல்லும் காரணிகளாக எவை வரையறை செய்யப்பட்டுள்ளன எனவும் விளங்கப்படுத்தினேன்.

அந்த முன்னேற்றத்திற்கு காரணமாக நின்ற பக்க பலமான அரசியல் அடிப்படைகளையும், நோக்கங்களையும் அவற்றிற்காக சொல்லப்பட்ட, செய்யப்பட்ட எதிர்மறைகளையும் பார்த்தோம்.

இவற்றுக்கெல்லாம் யார் பொறுப்பு? எந்த நோக்கங்களில் இவைகள் செய்யப்பட்டன? இதனை எப்பொழுதும், நான் சந்திப்பவர்களை அவர்களின் எண்ணங்களுக்காக கேட்பது வழமை. அவர்களின் கருத்துக்கள் பலவாறாக இருக்கும். ஆனால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்ற அனுதாபம் எல்லோரிடத்திலும் எப்போதும் இருந்தது. நாட்டிலிருந்து, அகதிகளாக ஆஸ்திரேலியாவிற்கு 1984 இலிருந்து வந்தவர்களுக்கு உதவிகள் செய்யும் பணியில் அவர்களின் அனுபவங்களில் அவர்கள் கருத்தையும் கேட்பது வழமை. அவர்கள் பதில்களில், தங்களது அகதிகள் விண்ணப்பங்களின் முடிவுகள் தான் முன்னிற்கும். ஆகவே என்னைதிருப்திப்படுத்தும் எண்ணம் அல்லது தர்க்கிக்க விரும்பாமல் இருந்ததை உணர்ந்தேன்.

இந்தத் தொடரை எழுத எனக்கு ஆய்வில் நிர்மலா ஜோசெப் உதவிய போது, அவரின் பின்னணியில், ஒரு தனியான அனுபவத்தில் அவரின் ஆராய்ச்சி பார்வையில் கருத்துக்கள் பெறலாம் என எண்ணினேன். எனது பார்வையை பாதித்தது போல் அவருக்கு நான் பெற்ற அனுபவங்கள் இருக்கவில்லை. பல சம்பவங்கள் நடந்து முடிந்த பின் தான் அவர் பிறந்து, நடந்த அனர்த்தங்களிடையே வளர்ந்து, பாதிக்கப்பட்டவர்களுடன் நேரடியாக பழகி, அவர்களுடைய அனுபவங்களையும் கருத்துக்களையும் அறிந்தவர். அவருடைய சக மாணவர்களது அனுபவங்களும் அப்படியே. அதாவது நடைபெற்ற அரசியலிருந்து விலத்தியிருந்தார்கள்.



அவர்கள் பொதுவெளியில் சிங்கள - தமிழ் மக்களுக்கிடையேயான போராட்டமா கவேப் பார்த்தார்கள். நடந்தவற்றில் பலவற்றை இந்த வரலாற்று பதிவின் மூலமே தெரிந்து கொண்டார்கள்.

ஆகவே அவர் போன்ற, இவற்றை ஆய்வு செய்யும் இளைஞர்கள், இந்த அட்டூழியங்கள் பற்றி என்ன எண்ணம் கொண்டுள்ளார்கள் என அறிந்து அதனையும் வாசகர்களுக்கு தரலாம் என கருதி சில கேள்விகளை முன்வைத்தேன். அவரின் பதில்களை அப்படியே தருகிறேன். இது அந்த இளைய சமுதாயத்தின் சொந்தக் கருத்துக்கள். அதில் எள்ளளவும் உந்துதல்கள் இல்லை.

ஆதன் முடிவில், தமிழ் மக்கள் இந்த அட்டூழியங்களை, இனப்படுகொலையாக எப்படி அரசியலாக்குகிறார்கள், அதில் எப்படி இவ்வளவு காலமும் அரசியலை கொண்டு போகிறார்கள், எவ்வளவு காலம் கொண்டு போவார்கள் என்று கேட்டவை பற்றி பின்னர் பார்ப்போம்.

(வளரும்...)



# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page 1 Sunday the 10th of October 2021


We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com

## Pandora Papers Exposé



Businessman Thirukumar Nadesan, one of two Sri Lankans named in the Pandora papers exposé, has written to President Gotabaya Rajapaksa declaring his innocence and requesting an impartial investigation. "It is commonly believed that all persons whose names have been [divulged in the Pandora papers] are in some way guilty of wrongdoing. "I assure Your Excellency that my wife and I are totally innocent and are guilty of no wrongdoings," Nadesan said in a letter addressed to the president and copied to Prime Minister Mahinda Rajapaksa on Wednesday (06).

Nadesan's wife former deputy minister Nirupama Rajapaksa is closely related to the president and prime minister, and the husband and wife duo are known, though low-profile, members of the powerful ruling family.

Nadesan and Nirupama Rajapaksa were named in the Pandora papers, a series of documents that have exposed the secret offshore affairs of 35 world leaders, including current and former presidents, prime ministers and heads of state. The investigation, carried out by the International Consortium of Investigative Journalists (ICIJ), reveals the secret finances of more than 300 other public officials such as government ministers, judges, mayors and military generals in more than 90 countries.

## President Orders Probe




President Rajapaksa has ordered an investigation. On Wednesday morning, he issued a directive to the Director General of the Commission to Investigate Allegations of Bribery or Corruption to investigate the matter and submit a report with a month.

Nadesan, however, has requested that an independent investigator, preferably a retired appellate court judge, conduct the probe so that his and his wife's names are cleared. "I am making this request to Your Excellency because my wife and I have suffered heartache and pain of mind. We have been presumed guilty, the presumption of innocence reversed," he wrote.

The ICIJ findings include 11.9 million files from companies hired by wealthy clients to create offshore structures and trusts in tax havens such as Panama, Dubai, Monaco, Switzerland and the Cayman Islands. According to international media reports, it is the world's largest ever leak of offshore data to have exposed financial secrets of rich and powerful people.

Members of Sri Lanka president, PM ruling family in Pandora papers The revelations have stirred much controversy in Sri Lanka. The main opposition Samagi Jana Balavegaya (SJB) on Tuesday called for a probe into the findings. Govt and opp MPs trade charges in Sri Lanka parliament over Pandora papers exposé




## Sajith Demands Impartial Inquiry



Opposition leader Sajith Premadasa said revelations made in the Pandora Papers must be investigated and the government members should not prevent such an impartial inquiry from being conducted.

Sri Lankan President Gotabaya Rajapaksa on Wednesday gave a one-month deadline to the country's anti-graft commission to investigate the people accused of maintaining offshore accounts in the unprecedented leak of financial documents known as the Pandora Papers.

Opposition leader Sajith Premadasa told Parliament that revelations made in the Pandora Papers must be investigated and the government members should not prevent such an impartial inquiry from being conducted.

"The President this morning asked the Bribery and Corruption Commission to investigate all Sri Lankans mentioned in the Pandora Papers and their transactions and report to him within a month," President Rajapaksa's spokesman Kingsly Rathnayake said.

The government disowned them and claimed that the couple had no political links with the current SLPP coalition and all transactions mentioned in the Pandora Papers were those done before the SLPP's assuming government office.

**He that loves reading has everything within his reach - William Godwin**

Name: ____________________ Date: ____________________

### Grade 6 Reading Comprehension Worksheet



**THE WIND AND THE SUN**

By James Baldwin

**Read the story. Then answer the questions.**

Once the Wind and the Sun had a dispute as to which was the stronger of the two. "Do you see that traveler plodding along the road?" said the Wind. "Let us both try our strength on him, and let the one who can first strip him of his cloak be the winner." "Agreed," said the Sun. The Wind began first. He blew a blast which sent the leaves flying through air; he raised clouds of dust in the road, bent the tops of the trees to the ground, and even tore up one sturdy oak by the roots. But the traveler only drew his cloak the more tightly around his shoulders, and kept on his way. Then the Sun began. He burst out from behind a black cloud, and, little by little, darted his sultry beams upon the traveler's head and back. The man did not notice this much at first, but soon the heat was so great that he stopped to wipe the sweat from his face. "Ah!" he said, "I cannot stand this. It is so hot that one might as well be in an oven!" Then he threw off his cloak, and carried it under his arm; and when he came to a tree by the roadside he sat down under its shade to cool himself. After that, the Wind never claimed to be stronger than the Sun.

Answer each question.

1. What had the dispute between the Wind and the Sun?
2. What did the Wind say to the Sun?
3. What did the Wind do then?
4. How did Sun try its strength?
5. What did Wind never claim again?

Name: ____________________ Date: ____________________

### Grade 7 Reading Comprehension



**While We Sleep**

By Sharon Noble

**Read the passage. Then answer the questions.**

While you are asleep at night, some people are at work. Night workers do many important jobs. They sleep during the day. Many cleaners work at night. They clean streets, offices and shops while it is quiet and there are not many people around. Road workers keep our roads safe to drive on. They often repair roads during the night when there is very little traffic. Some railway workers work at night, too. They fix train tracks and railway signals so that trains can travel safely.

People are also needed to drive trains and buses. Pilots fly planes at night, too. Many goods, such as fresh food and newspapers, have to be delivered every day. Some truck drivers work through the night to make sure that these goods arrive on time. Most bakers start work while it is still dark. They bake at night so that the bread will be fresh when it goes on sale in the morning. News stories don't only happen during the day. Some reporters need to work during the night to make sure that all the news is up to date. Hospital patients need to be looked after twenty-four hours a day. Many doctors, nurses need to work at night. Fires, accidents and other emergencies can happen at any time. So there are always firefighters, police and ambulance workers on duty.

Answer each question.

1. What the cleaners work at night and why?
2. Why do the railway workers work at night and what?
3. What things have to be delivered every day?
4. Why reporters work at night?
5. What kind of emergencies can happen at any time?
6. What do you think about the night workers?

# A Comprehension Question for G.C.E. O/L and A/L students

## HOW LEADERS SHOULD MANAGE FAILURES - DR.A.P.J ABDUL KALAM.



In 1973, I became the project director of Indian satellite launch programme. Our goal was o put India's ***" Rohini"*** satellite into the orbit by 1980. I was given funds and human resources . Thousands of scientists and technicians worked together towards the goal. By 1979 August we thought we were ready. As Project Director , I went to the control centre for launch; the computer began the check list of items.. One minute later, the computer programme put the launch on hold - some control components were not in order.

My experts told me not to worry: they had done their calculations and there was enough reserve fuel. So I passed the computer and ; switched to manual mode., and launched the rocket. In the first stage every thing worked fine. In he second stage a problem developed. The whole rocket plunged into the Bay of Bengal. It was a big failure.

That day, the Chairman of the Indian Space Research Organisation, Professor Dhawan,had called a press conference 45 minutes after the launch. He conducted the conference himself. He took the responsibility for the failure. He stated that the team had worked hard , that needed more technical support. He assured the media that in another year, the team would definitely succeed. Now, I was the project Director, and it was my failure, but instead, he took the responsibility for the failure.

The next year, in 1980, we tried again - and this time we succeeded. The whole nation was jubilant. Again there was a press conference. Professor Dhawan called me aside and told me, **' You** conduct the press conference today" .

When failure occurred , the leader owned that failure. When success came, **he** gave it to his team. The best management lesson I have learned did not come to me from reading a book. It came from my experience.

1. Say whether the statements below are True or False. Write " T " or " F " in the boxes given.

(a) The control centre computer warned the scientists to stop launching. [ ]

(b) Dr. Kalam's experts ignored the computer's warning. [ ]

(c) Dr. Kalam ignored his experts opinion and delayed the launch. [ ]

(d) The satellite went into the orbit before it fell into the sea. [ ]

2. How long did Dr. Kalam's team take before they thought they were ready.?

------------------------------------------------------------------------------------------

3. What did the computer display show?

------------------------------------------------------------------------------------------

4. Fill in the blanks with the words from the passage.

Dr. Kalam's experts told him not to -------------------, and they had done their ------------------- and there was enough reserve fuel.

5. Underline he correct answer.

If the scientists had not ignored the warning the computer displayed.....

(a) The launch wouldn't have been delayed.

(b) The launch wouldn't have been a success.

(c) The launch wouldn't have been a failure.

6. Find a word or a phrase from the passage that has the same meaning as the following.

money- .............................. very happy - ..............................

7. Who do the words highlighted refer to?

(a). " YOU " conduct the press conference today. -------------------------.

(b) . " HE" gave it to his team. -------------------------.

# NEVER MISS THE FIRST OPPORTUNITY



A young man wanted to marry the beautiful daughter of a farmer. He went to the farmer to ask his permission. The farmer looked him over and said ," Son, go stand out in the field. I'm going to release three bulls, one at a time . If you can catch the tail of any one of the three bull, You can marry my daughter."

The young man stood in the open green field awaiting the first bull. The barn door opened and out ran the biggest, meanest-looking bull he had ever seen. He decided one of the next bull had to be a better choice than this first one. So he ran over to the side and let the bull pass through the green field out the back gate.

The barn door opened again . Unbelievable. He had never seen anything so big and fierce all his life. It stood pawing the ground ,grunting as it eyed him. Whatever the next bull was like, it had to be a better choice than this one. He ran to the fence and let the bull pass through the green field, out the back gate.

The door opened a third time. A smile came across his face. This was the weakest little bull he had ever seen. This one was his bull. As the bull came running by, he positioned himself just right and jumped at just the exact moment. He grabbed....... but the bull had no tail !. Life is full of opportunities . Some will be easy to take advantage of. Some will be difficult. But once we let them pass( often in hope of something better) those opportunities may never again be available. So always grab the first opportunity.

# Nelson Mendela's Sense of Humour



When Nelson Mandela was studying law at the university, a white professor whose name was Peters, disliked him intensely. One day Mr. Peters was having his lunch at the dinning room when Nelson Mandela came along with his tray and sat next to the professor.

The professor said, " Mr. Mandela , you do not understand, a pig and a bird do not sit together to eat." Mandela looked at the Professor as a parent would at a rude child and calmly replied, " You do not worry professor,. " I'll fly away" , and he went and sat at another table.

Mr. Peters reddened with anger decided to take revenge. The next day in class he paused the following question. " Mr. Mandela, if you were walking down the street and found a package, and with in was a bag of wisdom and and another bag with money, which one would you take?"

Without hesitating , Mr. Mandela responded," The bag with money, of course" . Mr. Peters smiling sarcastically said,I, in your place , would have taken the wisdom." Mr. Mandela shrugged and responded, " Each one takes what he doesn't have." Mr. Peters this time was about to throw a fit, seeing with fury.

So great was his anger that he wrote on Nelson Mandela's exam sheet the word " Idiot" and gave it to the future struggle icon. Mandela took the exam sheet and sat down at his desk trying very hard to remain calm while he contemplated hid next move

A few minutes later ,Nelson Mandela got up, walked up to the professor and told him in a dignified , polite tone." Mr. Peters ", you have signed your name on my sheet, but you forgot to give me my grade.

# Hierarchy of Needs

**- Abraham Maslow**

In the mid-1950s, psychologist Abraham Maslow created the famous Maslow’s Hierarchy of Needs where he explained that certain needs (in the lower levels of the hierarchy) must be met before a person will try to satisfy higher-level needs. Over the years, this theory is being increasingly used to motivate learners in the classroom setting. It clearly explains its significant impact on the field of psychology and education.

The physiological need of the students is of utmost importance and holds the first level in the hierarchy of needs.
These needs are the most basic – This may include food, water, and shelter. If the physiological needs have not been met, students may not be able to focus fully on learning. Make sure you provide adequate lighting, space, ventilation (heating or cooling), refreshments or drinking water at least, offer toilet breaks etc.

A teacher should use her knowledge of the hierarchy to structure the classroom lesson and the environment. Preferably, the classroom should meet as many of the needs of students as possible, especially the safety, belonging, and esteem needs.

Student safety needs play a critical role in achieving student success. Students must not only feel physically safe in the classroom but emotionally and psychologically as well. An environment must be provided where students feel free to ask questions and share ideas without being mocked by other students or reprimanded by the teacher.

In the third level of students need to feel a sense of belonging and love. At this level, students need to identify with other students and need to feel that they fit in. The student must feel that he is important as an individual and as part of the group. This is can be promoted in your classroom by having sensible ground rules about respect for everyone and using inclusive learning techniques like group work.


The need for self-esteem i.e. self-confidence. It is at this fourth level that the student is most receptive to learning and wants to achieve a good level of self-esteem through recognition and achievement. Now the students feel confident; take responsibility for their own learning. To satisfy the self-esteem needs of your learners, you can get them involved in learner-centred activities such as peer-teaching and peer assessment.

At the fifth level, self-actualisation becomes the motivating factor; the students proactively look for ways to fulfil their potential for learning and seek fulfilment. At this level, students will strive to get an ‘A’ grade on their assignments, help one another and contribute and engage with the learning.

It is needless to say that Maslow’s Hierarchy can be used to enhance learning through motivation. When all levels of Needs are met, students show their full ability and eagerness for learning. The higher up in the hierarchy a student is, the better the motivation and therefore the student will experience more effective learning.

Each student can move up in the hierarchy with the proper support of the teachers and school staff who must focus on Maslow’s Hierarchy of needs in teaching and education.





# A Simple Guide to the Pandora Papers

The Pandora Papers is a leak of almost 12 million documents that reveals hidden wealth, tax avoidance and, in some cases, money laundering by some of the world's rich and powerful. More than 600 journalists in 117 countries have been trawling through the files from 14 sources for months, finding stories that are being published this week. The Pandora Papers leak includes 6.4 million documents, almost three million images, more than a million emails and almost half-a-million spreadsheets.

The data was obtained by the International Consortium of Investigative Journalists (ICIJ) in Washington DC, which has been working with more than 140 media organisations on its biggest ever global investigation. What has been uncovered?

- the owners of more than 1,500 UK properties bought using offshore firms, including individuals accused of corruption
- the Qatari ruling family who avoided £18.5m tax on a London super-mansion Sir Philip and Lady Green went on a property spree after off-loading the BHS retail chain which went on to collapse
- the prominent Tory donor who was involved in one of Europe's biggest corruption scandals the King of Jordan's £70m spending spree on properties in the UK and US through secretly-owned companies Azerbaijan's leading family's hidden involvement in property deals in the UK worth more than £400m
- the Czech prime minister's failure to declare an offshore investment company used to purchase two French villas for £12m
- how the family of Kenyan president Uhuru Kenyatta's secretly owned a network of offshore companies for decades.

The files expose how some of the most powerful people in the world - including more than 330 politicians from 90 countries - use secret offshore companies to hide their wealth. Lakshmi Kumar from US think-tank Global Financial Integrity explained that these people "are able to funnel and siphon money away and hide it," often through the use of anonymous companies.

The Pandora Papers reveal complex networks of companies that are set up across borders, often resulting in hidden ownership of money and assets. For example, someone may have a property in the UK, but own it via a chain of companies based in other countries, or "offshore".




These offshore countries or territories are where: it's easy to set up companies there are laws that make it difficult to identify owners of companies there is low or no corporation tax. The destinations are often called tax havens or secrecy jurisdictions. There is no definitive list of tax havens, but the most well known destinations include British Overseas Territories such as the Cayman Islands and the British Virgin Islands, as well as countries such as Switzerland and Singapore.

**Is it illegal to use a tax haven?**

Loopholes in the law allow people to legally avoid paying some taxes by moving their money or setting up companies in tax havens, but it is often seen as unethical. The UK government says tax avoidance "involves operating within the letter, but not the spirit, of the law". There are also a number of legitimate reasons people may want to hold money and assets in different countries, such as protection from criminal attacks or guarding against unstable governments.

Although having secretive offshore assets is not illegal, using a complex network of secret companies to move around money and assets is the perfect way to hide the proceeds of criminality. There have been repeated calls for politicians to make it harder to avoid tax or hide assets, particularly following previous leaks such as the Panama Papers.

How easy is it to hide money offshore?
All you need to do is set up a shell company in one of the countries or jurisdictions with high levels of secrecy. This is a company that exists in name only, with no staff or office. It costs money though. Specialist firms are paid to set up and run shell companies on your behalf. These firms can provide an address and names of paid directors, therefore leaving no trail of who is ultimately behind the business.

How much money is hidden offshore?
It is impossible to say for sure, but estimates have ranged from $5.6 trillion to $32 trillion, according to the ICIJ. The International Monetary Fund has said the use of tax havens costs governments worldwide up to $600bn in lost taxes each year. Ms Kumar said it is detrimental to the rest of society: "The ability to hide money has a direct impact on your life... it affects your child's access to education, access to health, access to a home."

What is the UK doing about it? The UK has been criticised for allowing property to be owned by anonymous companies overseas. The government published draft legislation in 2018 that would require the ultimate owners of UK properties to be declared. But it is still waiting to be presented to MPs. A 2019 parliamentary report said the UK system attracts people "such as money launderers, who may wish to use property to conceal illicit funds".

It said criminal investigations are often "hindered" because police cannot see who ultimately owns properties. The government recently raised the risk of money laundering through property from "medium" to "high". It says it's cracking down on money laundering with tougher laws and enforcement, and that it will introduce a register of offshore companies owning UK property when parliamentary time allows.

# Mark Zuckerberg has apologised



**Facebook co-founder Mark Zuckerberg has apologised to users around the world who faced disruption in accessing Facebook, Instagram, and WhatsApp. In his Facebook post, he said the apps were gradually coming back online. "Facebook, Instagram, WhatsApp and Messenger are coming back online now. "Sorry for the disruption today – I know how much you rely on our services to stay connected with the people you care about," said Zuckerberg in a Facebook post.**

# Welcome Home, Air India

Tata Sons chairman emeritus Ratan Tata shared an emotional note with an old picture of JRD Tata on Twitter after his firm successfully bid for Air India.

Shortly after the successful bid of Tata Sons for national carrier Air India was announced on Friday, the group's chairman emeritus Ratan Tata shared an emotional note with an old picture of JRD Tata.

On Friday, the government announced Tata Group as the successful bidder for national carrier Air India. With this, Air India has come back to its founder after 68 years. The Tata Group won the stake in Air India with a bid of Rs 18,000 crore.

Following the successful bid, Ratan Tata tweeted, "Welcome Home, Air India."




# பழங்களில் மாஸ்க்

முகம் பொலிவுடன் இருக்க வேண்டும் என்று கடைகளில் விற்கும் ஃபேஸ் மாஸ்க்குகளை போடுவதற்கு பதிலாக, பழங்களை வைத்து மாஸ்க் போட்டால், அதில் உள்ள சத்துக்கள் முகத்தை பளிச்சென்று பொலிவுற வைக்கும்.

அதிலும் மாம்பழம், பப்பாளி, எலுமிச்சை, திராட்சை, போன்றவை மாஸ்க் போடுவதற்கு மிகவும் சிறந்த பழங்கள்.

உதடு மென்மையாக மற்றும் வறட்சியின்றியும் இருப்பதற்கு லிப் பாம்களை பயன்படுத்தாமல், சிறிது நெய்யை தடவி வந்தால், உதடுகளில் வெடிப்புகள் ஏற்படாமல் தடுக்கலாம். இவ்வாறு செய்வதினால் உதடு மென்மையாகவும் வறட்சியின்றியும் காணப்படும்.





## ஒரு இரவு போதும் உங்கள் முகம் வெள்ளையாக டிப்ஸ்



### முகத்தை கழுவுவது மிகவும் அவசியம்

தினமும் முகத்தை மூன்று அல்லது நான்கு முறையாவது குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும், இதனால் சருமத்தில் இருக்கும் அழுக்குகள் நீங்கி முகம் பொலிவாக காணப்படும்.



### ஆவிப் பிடித்தல்

சருமத்தை ஆரோக்கியமாக பாதுகாக்கவும், சருமம் பொலிவாக, சருமத்தில் ஏற்படும் பருக்கள் மறையவும் தினமும் ஒரு முறையாவது ஆவிப் பிடிப்பது மிகவும் நல்லது, இவ்வாறு செய்வதினால் சரும செல்களுக்கு புத்துயிர் அளிக்கின்றது, இதனால் சருமம் என்றும் பொலிவுடன் காணப்படும்.

## கூந்தல் பராமரிப்பு





தேங்காய் எண்ணெய்யை வெதுவெதுப்பாக சூடேற்றி, தலைக்கு தடவி நன்கு 20 நிமிடம் மசாஜ் செய்து, 30 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முடி வளர்ச்சி அதிகரிப்பதோடு, முடி அடர்த்தியாக வளரும்.

குறிப்பாக இரவில் தலைக்கு மசாஜ் செய்துவிட்டு, காலையில் குளிப்பது நல்ல பலனைத் தரும்.

கூந்தல் முடி 5 மடங்கு அடர்த்தியாக வளர இந்த எண்ணெய் போதும்.

## சருமத்தில் உள்ள எண்ணெய் பசை நீங்க



சிலருக்கு சருமத்தில் எப்பொழுதும் எண்ணெய் வழிந்துகொண்டே இருக்கும். அப்படிப்பட்டவர்கள் இந்த ஃபேஸ் பேக்கினை செய்து பூசிப்பாருங்கள் சரியாகிவிடும்.

அதாவது ஒரு சுத்தமான கிண்ணத்தில் ஒரு தேக்கரண்டி சந்தனம், தேவையான அளவு காய்ச்சாத பசும் பால் ஆகியவற்றை சேர்த்து நன்றாக கலந்து கொள்ளவும். இந்த கலவையை சருமத்தில் பூசிய பின் 20 நிமிடங்கள் அப்படியே வைத்திருக்கவும். பின் குளிர்ந்த நீரால் சருமத்தை கழுவ வேண்டும். இவ்வாறு வாரத்தில் இரண்டு முறை தொடர்ந்து செய்துவர சருமத்தில் வடியும் எண்ணெய் பசை நீங்கி சருமம் பட்டுப்போல் பளபளக்கும்.

## அழகு குறிப்புக்கள்



### அரிசி களைந்த நீர்

தினமும் அரிசி களைந்த நீரில் முகம் கழுவினால் சருமத்தில் உள்ள அழுக்குகளை மட்டும் நீக்காமல் உள்ளிருக்கும் அதிக எண்ணெய் மற்றும் கரும்புள்ளிகளை அகற்றும்.

### வெள்ளரிக்காய்



வெள்ளரிக்காயை கண்களில் சிறிது நேரம் வைத்து அமைதியாக உட்கார்ந்தால், கண்களில் இருக்கும் சோர்வு நீங்கி, கருவளையங்களும் நீங்கிவிடும்.

எனவே தான் இப்போதும், எந்த ஒரு அழகு நிலையங்களுக்கு சென்றாலும், முகத்திற்கு ஃபேஸ் மாஸ்க் போட்ட பின், கண்களுக்கு வெள்ளரிக்காய் துண்டுகளை வைக்கின்றனர்.

எனவே கண் அழகை அதிகரிக்க தினமும் கண்களில் வெள்ளரிக்காயை வைத்து சிறிது நேரம் அப்படியே அமர்ந்திருங்கள், பின்பு கண்களை கழுவிவிடுங்கள்.

### தயிர்

கூந்தலுக்கு கெமிக்கல் கலந்த கண்டி-னர்களைப் பயன்படுத்துவதற்கு பதிலாக தயிரைப் பயன்படுத்தினால், கூந்தல் நன்கு பட்டுப் போன்று, மென்மையாக இருக்கும். முடி உதிர்வு பிரச்சினை நீங்கி, முடி அடர்த்தியாக வளர உதவி செய்யும்.

சருமத்திற்கு க்ரீம்கள் மற்றும் லோசன்கள் பயன்படுத்துவதற்கு, தேங்காய் எண்ணெய் அல்லது கடுகு எண்ணெயை தடவினால், சருமம் மென்மையாக, ஈரப்பதத்துடன், சுருக்கமின்றி இருக்கும்.

# மணத் தக்காளியின் மருத்துவமும் சமையலும்

கீரைகள் கடவுள் நமக்கு தந்த வரப் பிரசாதம் என்று சொல்லலாம். ஏனெனில் கீரைகளில் சத்துக்களானது அதிகம் இருப்பதால் தான், நம் வீட்டில் உள்ள பாட்டிகள் அடிக்கடி வீட்டில் கீரையை சமைக்கச் சொல்வார்கள். மேலும் அக்காலத்தில் நம் முன்னோர்கள் கீரைகளை அதிகம் உட்கொண்டு வந்ததால் தான், அவர்களின் உடல் இன்று வரை மிகவும் வலிமையுடன் உள்ளது. அதுமட்டுமன்றி, அவர்களின் உடலை எந்த ஒரு நோயும் அவ்வளவு எளிதில் தாக்குவதில்லை.

இத்தகைய கீரைகளில் பல வகைகள் உள்ளன. அவற்றில் ஒன்று தான் மணத்தக்காளி கீரை. இந்த கீரையின் தண்டு, இலை, காய், பழம் போன்ற அனைத்துமே சமையலில் மட்டுமன்றி, மருத்துவத்திலும் பயன்படுகிறது. மேலும் 100 கிராம் கீரையில் நீர்ச்சத்து 82.1%, புரோட்டீன் 5.9%, கொழுப்பு 1%, தாது உப்புக்கள் 2.1% உள்ளது. இப்போது அந்த மணத்தக்காளி கீரையின் முக்கியமான மருத்துவக் குணங்கள் பற்றிப் பார்ப்போம்.



வாய்ப்புண் உள்ளவர்கள், மணத்தக்காளி கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், வாய்ப்புண் மட்டுமன்றி, வயிற்றுப்புண்ணும் குணமாகும். ஏனெனில் வாய்ப்புண் உள்ளவர்களுக்கு வயிற்றுப்புண்ணும் இருக்கும். மலச்சிக்கலால் அவஸ்தைப்படுபவர்கள், மணத்தக்காளி கீரையை சாப்பிட்டால், இப் பிரச்சினையில் இருந்து விடுபடலாம்.

### தொண்டை கரகரப்பு

தொண்டை கரகரப்பு உள்ளவர்களுக்கு இந்த கீரை விரைவில் நிவாரணம் அளிக்கும். எனவே வாரம் இரண்டு முறை இந்தக் கீரையை உணவில் சேர்த்து வந்தால், தொண்டை கரகரப்பு ஏற்படுவதைத் தடுக்கலாம்.

### செரிமான பிரச்சினை

செரிமான பிரச்சினை உள்ளவர்கள், மணத்தக்காளி கீரையை சாப்பிட்டு வந்தால், உடலுக்கு வேண்டிய சத்துக்கள் கிடைப்பதுடன், செரிமான பிரச்சினையும் நீங்கிவிடும்.

### உடல் வெப்பம்

உடல் வெப்பம் அதிகம் இருந்தால், மணத்தக்காளி கீரையை சமைத்து சாப்பிட்டு வர, உடல் வெப்பம் தணியும். காசநோய் உள்ளவர்கள் இந்தக் கீரையின் பழத்தை தினமும் சாப்பிடுவது நல்லது.

### கை கால் வலி

காய்ச்சல் வந்தால், கை கால் போன்றவை வலி எடுக்கும். இத்தகைய வலியையும், காய்ச்சலையும் போக்க இந்தக் கீரையை சாப்பிடுவது சிறந்தது.

### சரும அலர்ஜி

சருமத்தில் அலர்ஜி, வெயில் கட்டி போன்றவை இருந்தால், அப்போது மணத்தக்காளியின் சாற்றினை பிரச்சினை உள்ள இடத்தில் தடவினால், விரைவில் குணமாகும்.

### சிறுநீர் கோளாறு

சிலர் தினமும் சரியாக சிறுநீர் கழிக்கமாட்டார்கள் அத்தகையவர்கள் மணத்தக்காளி கீரையை சாப்பிட்டு வந்தால், சிறுநீர் சீராக வெளியேறி சிறுநீரகத்தில் கோளாறு ஏற்படாமல் பாதுகாக்கலாம்.

### கருத்தரிப்பு

உடனே கருத்தரிக்க வேண்டும் என்று நினைக்கும் புதுமணத் தம்பதியர்கள் மணத்தக்காளி கீரையை சாப்பிட்டு வந்தால், கரு வலிமை பெறும். குறிப்பாக பெண்கள் சாப்பிட்டு வந்தால், பிரசவம் எளிமையாக நடைபெறும்.

### கல்லீரல் பிரச்சினை

கல்லீரல் பிரச்சினைகள் மஞ்சள் காமாலையினால் ஏற்படும் கல்லீரல் பாதிப்பு மற்றும் இதர கல்லீரல் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வைக் காண மணத்தக்காளி கீரை பெரிதும் உதவியாக இருக்கும்.

### நெஞ்சு வலி

நெஞ்சு வலி மணத்தக்காளி கீரை மற்றும் பழத்தினை காய வைத்து, பொடி செய்து காலை மற்றும் மாலையில் 1/2 ஸ்பூன் சாப்பிட்டு வந்தால், நெஞ்சு வலி குணமாவதோடு, இதயமும் வலிமையடையும். வலிமையான விந்தணு முக்கியமாக ஆண்கள் மணத்தக்காளி கீரையை சாப்பிட்டு வந்தால், அவர்களின் விந்தணு வலிமையுடன் இருக்கும்.

### வாய்ப்புண் குணமாகும்

மணத்தக்காளிக் கீரை வாய்ப்புண்களைக் குணமாக்கும் அருமருந்து. இதன் பச்சை இலைகளைத் தேவையான அளவு நெய் சேர்த்து வதக்கி, துவையல் செய்து, சாதத்துடன் சேர்த்துச் சாப்பிட்டுவர வாய்ப்புண் குணமாகும். வெறும் பச்சை இலைகளை, நாள் ஒன்றுக்கு ஐந்துமுறைகள் நன்றாக மென்று சாற்றை விழுங்கினாலும், வாய்ப்புண் முழுமையாக குணம் ஆகும்.

### மூட்டு வீக்கங்கள்

மூட்டுப் பகுதியில் ஏற்படும் வீக்கங்கள் காரணமாக அவதிப்படுபவர்கள், மணத்தக்காளி இலைகளை வதக்கி, மூட்டுப் பகுதியில் ஒத்தடம் கொடுத்தால், நல்ல பலன் கிடைக்கும். மணத்தக்காளிக் காயை வற்றல் செய்து, குழம்புக்குப் பயன்படுத்தலாம்.

## மணத்தக்காளி வத்தல் குழம்பு

### தேவையான பொருள்கள் (நான்கு பேருக்கு)



20 கிராம் மணத்தக்காளி வத்தல்
ஒரு எலுமிச்சைப்பழ அளவு புளி
1 வெங்காயம்
10 பல் பூண்டு
ஒரு தேக்கரண்டி கடுகு
ஒரு தேக்கரண்டி சீரகம்
அரை தேக்கரண்டி வெந்தயம்
3 தேக்கரண்டி மல்லி பொடி
ஒன்றரை தேக்கரண்டி மிளகாய் பொடி
அரை தேக்கரண்டி மஞ்சள் பொடி
5 தேக்கரண்டி நல்லெண்ணெய்
2 தழை கருவேப்பிலை
தேவையான அளவு உப்பு
மசாலா அரைக்க
ஒரு தேக்கரண்டி கடலைப்பருப்பு
ஒரு தேக்கரண்டி உளுத்தம் பருப்பு
ஒரு தேக்கரண்டி மல்லி
ஒருதேக்கரண்டி சீரகம்
அரை தேக்கரண்டி மிளகு
கால் தேக்கரண்டி வெந்தயம்
1 பொடியாக நறுக்கிய வெங்காயம்
1 பொடியாக நறுக்கிய தக்காளி
10 பல் பூண்டு

முதலில் சூடாக்கி நல்லெண்ணெய் ஒரு தேக்கரண்டி ஊற்றி காய்ந்ததும் மசாலா அரைக்க கொடுத்துள்ளவற்றை (வெங்காயம், தக்காளி, பூண்டு தவிர) சேர்த்து வறுத்து வெங்காயம், தக்காளி, பூண்டு இவற்றையும் சேர்த்து நன்கு வதக்கி எடுத்து தனியே ஆறவிடவும். வறுத்துள்ள பொருள்கள் ஆறியவுடன் மிக்ஸியில் விழுதாக அரைத்துக் கொள்ளவும்.

பின்னர் ஒரு அடி கனமான பாத்திரத்தை சூடாக்கி நல்லெண்ணெய்யை ஊற்றி காய்ந்ததும் கடுகு, சீரகம், வெந்தயம் தாளித்து கருவேப்பிலை, வெங்காயம், பூண்டு மற்றும் மணத்தக்காளி வற்றல் இவற்றை சேர்த்து நன்கு வதக்கவும். பிறகு புளியை மூன்று கப் நீரில் கரைத்து ஊற்றவும்.

பிறகு மிளகாய் தூள், மல்லி தூள், மஞ்சள் தூள் மற்றும் தேவையான உப்பு சேர்த்து கலந்து 10 நிமிடம் கொதிக்கவிடவும். பின்பு மசாலா விழுதை அரை கப் நீர் விட்டு கலந்து குழம்பில் சேர்த்து கட்டிகள் இல்லாமல் கலந்து விடவும்.

மேலும் 5 நிமிடம் அதிக தீயில் கொதிக்கவிட்டு குழம்பு இறுக்கமானவுடன் அடுப்பில் இருந்து இறக்கவும். சூடான மணத்தக்காளிக் குழம்பை சாதத்துடன் பரிமாறவும்.




## புடலங்காய் தோசை



### தேவையான பொருள்கள்

இட்லி அரிசி - 1 1/2 கப்
முழு உளுந்து தோல் நீக்கியது - 1/4 கோப்பை
வெந்தயம் - 1/4 தேக்கரண்டி

மேலுள்ளவற்றை சுமார் 3 மணிநேரம் கழுவி நீரில் ஊறவைக்கவும்.
சுத்தம் செய்து சிறு துண்டுகளாக நறுக்கிய புடலங்காய் -1 கப்

இப்போ மூன்று மணிநேரம் ஊறிய இட்லி அரிசி, உளுந்து, வெந்தயம் மற்றும் நறுக்கிய புடலங்காய் அனைத்தையும் மிக்சியில் போட்டு அரைக்கவும் . அரைக்கும்போது நீர் குறைவாக தெளித்து விட்டால் போதுமானது ஏனென்றால் புடலங்காயில் நீர்த்தன்மை உண்டு .

பிறகு அரைத்த மாவில் தேவையான அளவு உப்பு சேர்க்கவும், மூன்று தேக்கரண்டி சீரகமும் சேர்த்தால் தோசை நல்ல சுவையுடன் வரும் .

இந்த மாவை புளிக்கவைக்க வேண்டாம் உடனே சுட்டு சாப்பிட சுவையாமொறு மொறுப்பான தோசையாக வார்க்கலாம் .





# பெண்களுக்காக சில மருத்துவ குறிப்புகள்



* இளவயதில் தினமும் ஒரு கப் பால் குடிப்பது, எலும்புகளை வலுவாக்கி கல்சியம் சத்தை அதிகரிக்கும்.

* முட்டைகோஸில் ஈஸ்ட்ரோஜன் அதிகமென்பதால் மார்பக புற்று வராமல் தடுக்க கோதுமை உணவுடன் முட்டை கோஸ் சேர்த்து பெண்கள் உண்ணலாம்.

* மார்பக புற்று உள்ளிட்ட பல்வேறு புற்று நோய்கள் வராமல் தடுக்க அப்பிள் உதவுகிறது.

* மாதவிடாய்க் கால மன அழுத்தம், பயம், பதற்றம் ஆகியவற்றால் தொந்தரவா..? அந்த நாள்களில் கார்ன் ஃபிளாக்ஸை காலை உணவாக்குங்கள்.

**கர்ப்பக் கால கவனிப்பு**

* கர்ப்பிணிகள், நாவல்பழம் சாப்பிட்டால் வயிற்றில் உள்ள குழந்தை கறுப்பாகப் பிறக்கும் என்பதும், குங்குமப்பூ சாப்பிட்டால் சிவப்பாகப் பிறக்கும் என்பதும் மூட நம்பிக்கையே. தோலின் நிறத்தை நிர்ணயிப்பவை 'மெலனின்' எனப்படும் நிறமிகளே.

* கர்ப்பிணிகள், இரும்புச்சத்து மாத்திரை சாப்பிட்டால், உடல் லேசாக கறுத்து, பிறகு பழைய நிறத்துக்கு வந்துவிடும். இதை வைத்தே, குழந்தையும் கறுப்பாக பிறக்கும் என்று சிலர் பயப்படுவார்கள். அது தேவையற்றது.

* கர்ப்பிணிப் பெண்கள், காலையில் சீக்கிரம் சாப்பிட வேண்டும். இதனால் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு குறையாமலிருக்கும். அடிக்கடி மயக்கமும் வராது.

* வயிற்றில் குழந்தை வளர வளர, குடல் ஒரு பக்கம் தள்ளும். அப்போது அதிகமாக சாப்பிட முடியாது. சீக்கிரமும் பசிக்காது. அந்த நேரங்களில் ஜூஸ், முளை கட்டிய தானியங்கள் போன்றவற்றை, பல வேளைகளாகப் பிரித்துச் சாப்பிட வேண்டும்.

* பிரசவ காலத்துக்குப் பின் வயிற்று தசைகள் வலுப்பெற உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும்.

* கர்ப்பிணிகளின் உடலுக்கு இயற்கையான குளிர்ச்சியைத் தருகிறது வாழைப்பழம். உடல் காரணங்களால் மட்டுமல்ல, உணர்ச்சிவசப்படுவதாலும் உடலைப் பாதிக்கும் சூட்டை வாழைப்பழம் நீக்குகிறது. தாய்லாந்தில் தாயாகப் போகிறவரின் தினசரி உணவில் வாழை ரெசிபிக்கள் விதவிதமாக இருக்கும்.

* கர்ப்பக் காலத்தில் சிலருக்கு கால்கள் வீங்குவது வழக்கமான ஒன்று. அதிகமாக தண்ணீர் குடிப்பதால்தான் இப்படி என்று சொல்வது தவறு. கர்ப்பக் காலத்தில் மலச்சிக்கல் பிரச்சினை வரும். அதைத் தவிர்க்க அதிகமாக தண்ணீர் குடிக்க வேண்டும்.

* பிரசவம் முடிந்த சில நாள்களில், வயிறு சுருங்க வேண்டும் என்பதற்காக பெரிய துணியை வயிற்றில் கட்டிவிடுவார்கள். அது தவறு. இதனால் கருப்பை கீழிறங்கிட வாய்ப்பு உண்டு. இருமல் அல்லது தும்மலின்போது சிலருக்கு சிறுநீர் வெளியாவதற்கு காரணம் இதுதான். பிரசவம் முடிந்து ஆறு வாரம் கழித்து, அதற்கான பெல்ட்டை அணியலாம்.

* தைரோய்டு, சுகர் போன்ற பிரச்சினைகள் உள்ள பெண்கள், கர்ப்பக் காலத்தில் அதற்கான மருந்துகளைக் கட்டாயம் எடுத்துக்கொள்ள வேண்டும். அது, குழந்தையைப் பாதிக்காது.

* பிறந்த குழந்தைக்கு பழைய துணியை முதலில் அணிவிப்பது சம்பிரதாயமாக இருக்கிறது. நீண்டநாள் பெட்டியில் வைத்திருந்த துணியை அப்படியே எடுத்துப் போடக் கூடாது. அதில் தொற்றுக் கிருமிகள் இருக்கலாம். துவைத்து, காய வைத்த பிறகே அணிவிக்க வேண்டும்.

* சில கிராமங்களில் பிறந்த குழந்தையின் நாக்கில் தேன், சர்க்கரை, கழுதைப் பால் போன்றவற்றைத் தடவும் பழக்கம் உள்ளது. நாள்பட்ட தேனாக இருந்தால் அதிலிருக்கும் ஒரு வகை நச்சுக்கிருமி, இளம்பிள்ளைவாதத்தைக் கூட கொண்டு வரக்கூடும்.

* வாழைப்பழத்தில் இருக்கும் பொட்டாசியம் குழந்தைகளின் மூளைத்திறனைத் தூண்டுகிறது.

* குழந்தைகள் விளையாடச் செல்வதற்கு முன்பு நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். விளையாடும்போது வியர்வையாக வெளியேறும் நீரை, அது ஈடு செய்யும்.

* தாய்ப்பாலை சேமித்து கொடுப்பது நல்லதல்ல. தவிர்க்கமுடியாத பட்சத்தில், சுத்தமான பாத்திரத்தில் சேகரித்துக் கொடுக்கலாம். சாதாரண அறை வெப்பத்தில் 6 மணி நேரம் வரை கெடாமல் இருக்கும்.

* தயிர் சாப்பிட்டால் குழந்தைகளுக்குச் சளி பிடிக்கும் என்பது தவறு. குழந்தைக்குத் தயிர் மிகவும் நல்ல உணவு. தயிரில் புரொபயோட்டிக் எனும் சத்து அதிகம். அது குடலுக்கு மிக நல்லது. குழந்தைக்கு அலர்ஜி வராமல் தடுக்கும்.

* குழந்தைகள் உணவில் மாவுச் சத்துக்களே அதிகமிருப்பதால், வாழைப்பழம் அவசியம் கொடுக்க வேண்டும். இது மலச்சிக்கலைப் போக்கும். வாழைப்பழம் சாப்பிட்டால் சளி பிடிக்கும் என்பது தவறு.

* குழந்தைகள் குண்டாக இருக்க வேண்டும் என்று அளவுக்கு அதிகமாக உணவு கொடுத்து உடலை பருமனாக்காதீர்கள். 60 வயதில் வர வேண்டிய பி.பி., சுகர் போன்றவை 30 வயதிலேயே வந்துவிடும். குழந்தைகளை சீரான உடல்வாகுடன் வளர்க்கப் பாருங்கள்.

**உணவே மருந்து நல்ல உணவுகளே ஆரோக்கியம் !!**

* நீங்கள், தினமும் ஐந்து விதமான பழங்களையும், சில காய்கறிகளையும் உணவாக எடுத்துக் கொள்பவரா..? ஆம் என்றால், ஆரோக்கியமும் அழகும் எப்போதும் உங்க பக்கம்தான்.

* தினமும் ஒரு டம்ளர் மாதுளை ஜூஸ் குடிப்பது, உடலில் ரத்த அழுத்தம், கொழுப்பு, நச்சுத்தன்மை என பல பிரச்சினைகளுக்குத் தீர்வாக இருக்கும்.

* மனநலக் கோளாறு மற்றும் மூளை நரம்புகளில் பாதிப்பு உள்ளவர்களின் தினசரி உணவில் தர்பூசணி துண்டுகள் அவசியம். மன அழுத்தம், பயம் போன்ற பாதிப்புகளை தகர்க்கும் விட்டமின் பி 6 தர்பூசணியில் அதிகம்.

* அப்பிள் தோலில் பெக்டின் என்ற வேதிப்பொருள் கணிசமாக இருப்பதால், தோலோடு சாப்பிட வேண்டும். பெக்டின் நம் உடலின் நச்சுக்களை நீக்குவதில் முதன்மையானது.

* வெள்ளைப் பூண்டு சாப்பிட்டீர்களென்றால், உங்கள் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி வெகுவாக அதிகரிக்கும். வெள்ளை அணுக்கள் அதிகம் உற்பத்தியாவதோடு, கான்சர் செல்கள் உருவாகாமலும் தடுக்கும்.

* சிவப்பணு உற்பத்திக்கு புடலங்காய், பீட்ரூட், முருங்கைக்கீரை, அவரை, பச்சைநிறக் காய்கள், உளுந்து, துவரை, கம்பு, சோளம், கேழ்வரகு, பசலைக்கீரை போன்றவற்றை அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

* பச்சைப் பயறு, மோர், உளுந்துவடை, பனங்கற்கண்டு, வெங்காயம், சுரைக்காய், நெல்லிக்காய், வெந்தயக்கீரை, மாதுளம் பழம், நாவற்பழம், கோவைக்காய், இளநீர் போன்றவை உடலின் அதிகப்படியான சூட்டைத் தணிக்கும்.

* சுண்டைக்காயை உணவில் சேர்த்தால், நாக்குப் பூச்சித் தொல்லை, வயிற்றுப்பூச்சித் தொல்லை தூர ஓடிவிடும்.

* வெங்காயம், பூண்டு, சிறுகீரை, வேப்பிலை, மிளகு, மஞ்சள், சீரகம், கருப்பட்டி, வெல்லம், சுண்டைக்காய் வற்றல், செவ்விளநீர், அரைக்கீரை, எலுமிச்சை போன்றவை உடலில் உள்ள நச்சுத்தன்மை நீக்கும் உணவுகள்.

* பொன்னாங்கண்ணிக் கீரையைத் துவட்டல் செய்து சாப்பிட்டு வந்தால், மூல நோய் தணியும். இந்தக் கீரையின் தைலத்தை தலைக்குத் தேய்த்துக் குளித்து வந்தால், கண் நோய்கள் நெருங்காது.

* சமையலுக்குக் கைக்குத்தல் அரிசியைப் பயன்படுத்துவது மிக மிக நல்லது. கைக்குத்தல் அரிசியில் நார்ச்சத்துக்கள் நிறைந்துள்ளன.

* அடிக்கடி நொட்டை தீனிகளை சாப்பிடுவதை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். அதற்குப் பதிலாக தானியங்கள், முளைகட்டிய பயறு போன்றவற்றைச் சாப்பிடலாம்.

* பப்பாளிப் பழங்கள் மிகவும் சத்து மிகுந்தவை. வாரம் ஒருமுறை பப்பாளிப் பழம் வாங்கிச் சாப்பிடுங்கள். கண்களுக்கும் நல்லது.

# காயம்பட்டவரை அவசரத்தில் கண்டபடி தூக்கிச் செல்லக் கூடாது



இப்போதெல்லாம் மருத்துவம் என்பது நம் உடல் பயிற்சியிலும் உணவிலும் தங்கி விட்டது. சரியான உடற்பயிற்சி இன்மையால், சரியான உணவு இன்மையால் வரும் நோய்களே இன்று எம்மை வாட்டுகின்றன

அந்தவகையில் சில பொதுவான மருத்துவ குறிப்புக்களை பார்ப்போம்.

* காயம்பட்டவரை அவசரத்தில் கண்டபடி தூக்கிச் செல்லக் கூடாது. படுக்க வைத்து மட்டுமே தூக்கிச் செல்ல வேண்டும். ஒருவேளை தண்டுவடம் பாதிக்கப்படாமல் இருந்து, நீங்கள் உடலை மடக்கித் தூக்குவதன் மூலம் அது பாதிப்படையலாம். உடல் பாகங்கள் செயல் இழந்து, நிலைமையை மேலும் சிக்கலாக்கி விடும்.

* எலும்பு முறிவு ஏற்பட்டால், எக்ஸ் – ரே எடுத்துப் பார்க்காமல் குத்துமதிப்பாக கட்டுப் போட்டு கொள்ளாதீர்கள். ஏனென்றால், எலும்புகள் கோணல்மாணலாக சேர்ந்துகொள்ளவும், தசைகள் தாறுமாறாக ஒட்டிக்கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. இதனால் கால்கள் கோணலாக, குட்டையாக மாறக்கூடிய ஆபத்து இருக்கிறது.

* பிஸியோதெரபி என்பது இயற்கை வலி நிவாரணி. மாதக் கணக்கில் வலி நிவராணி மாத்திரைகள் சாப்பிடுவதன் மூலம் குணமாகும் பிரச்சினையை, வாரக் கணக்கிலேயே குணமாக்கிவிடும்.

* எலும்பு உறுதிக்கு கல்சியத்தைவிட, புரொட்டீன்ஸ் மிக முக்கியம். புரொட்டீன்ஸ் என்பது புடைவைஎனில், அதில் உள்ள டிசைன்ஸ் தான் கல்சியம். பருப்பு வகை, சோயா, காளான், முட்டை, இறைச்சி போன்றவற்றில் புரொட்டீன்ஸ் அதிகமாக உள்ளது.

* எடை குறைவான இருசக்கர வாகனங்களைப் பயன்படுத்துவோர், மிக மெதுவாக செல்ல வேண்டும். வேகமாக செல்லும்போது ஏற்படும் அதிர்வுகள் நேரடியாக முதுகு, கழுத்து மற்றும் இடுப்புப் பகுதியை பாதிக்கும்.

* எலும்புகள், 25 வயது வரைதான் பலம் பெறும். அதன்பிறகு மெல்ல வலுவிழக்க ஆரம்பிக்கும். எனவே, குழந்தைப் பருவத்திலிருந்து 25 வயது வரை சாப்பிடும் சத்தான உணவுகள் தான் எலும்பை உறுதிப்படுத்தும். அதன் பிறகு சாப்பிடுவதெல்லாம் எலும்புகளின் வலு குறையும் வேகத்தை குறைக்க மட்டுமே உதவும்

* வயதான காலத்தில் தடுமாறி விழுந்தால் முதுகு எலும்பு, இடுப்பு எலும்பு உடைந்து போக வாய்ப்பு அதிகம். வயதானவர்கள் நடமாடும் பகுதிகளில் தரை வழவழப்பாக இருக்கக் கூடாது. நல்ல வெளிச்சத்தோடு இருக்க வேண்டும். காப்பெட்டில் கூட தடுக்கி விழலாம். எனவே, அவர்கள் எதையாவது பிடித்தபடி நடப்பதற்கு வழி செய்ய வேண்டும்.

* கால் தடுமாறி பிசகிவிட்டால் உடனே 'கையால் நீவிவிடு' என்பார்கள். அது தவறு. ஒருவேளை, எலும்பில் நூலிழை தெறிப்பு இருந்தால், நீவி விடுவதன் மூலம் அந்தத் தெறிப்பு அதிகரிக்கலாம்.

* குதிகால் வலி, கீழ் முதுகுவலி, கழுத்துவலி போன்றவை வந்தால் உடனே டாக்டரைப் பார்க்க ஓடாதீர்கள் நாற்காலியும் செருப்பும் கூட காரணமாக இருக்கலாம். அணிந்திருப்பது தரமான செருப்புதானா, நாற்காலியில் முதுகு நன்றாகப் படியும்படி அமர்கிறோமா, என்பதையெல்லாம் கவனியுங்கள். அரை மணி நேரத்துக்கு ஒரு முறை, ஐந்து நிமிடம் சாய்ந்து அமர்ந்து 'ரிலாக்ஸ்' செய்துகொள்வதையும் வழக்கமாக்குங்கள். இவ்வளவுக்குப் பிறகும் தொல்லை இருந்தால், டாக்டரைப் பார்க்கலாம்.



# பசுமைத் தேவதை

புதைந்து போன வளங்களை
புதுப்பித்து புதையலாய் தர வருதே
பசுமைத் தேவதை

நிழலும் இலையும் பூவும் கனியும் தருமே மரங்கள்
நிற்கவும் நடக்கவும் புல் வெளிகள் தருமே பசுமை

மருந்தாகும் பல இலையே
விருந்திற்கும் பல இலையே

நிலையாகும் அழகான மரமே
நிலையான பொருளாகும் மரமே

மழை தந்து மகிழ்விக்கும் மரமே
நிழல் தந்து களைப்பாற்றும் மரமே

மண் வளத்தைக் காக்கும் மரமே
பொன்னாய் பயிர் விளையும் மரமே

வண்ண வண்ண பூக்கள் தரும் மரமே
உண்ணக் கனியுடன் பசி தீர்க்கும் மரமே

பட்டுக் காய்ந்த பின்னும் விறகாகும் மரமே
எட்டுத் திக்கும் வளம் பெருக மரமே

குளிருக்கு இதமாகும் பசுமைப் போர்வை
வெயிலுக்கு இதமாகும் பசுமைக் காற்று

குடை பிடிக்கவும் காத்திருக்கும் மரங்கள்
கொடையாய் பிடித்ததைத் தரும் மரங்கள்

அத்தனை வளங்களையும் புதையலாய் தரும் மரங்கள்
தித்திப்பாய் வாழ்வை மாற்றிடும் மரங்கள்

பசுமையை பக்கம் வைத்தே வாழ்வோம்
பல்வேறு வளங்கள் பெற்றே உயர்வோம்..

றொசில்டா அன்டோ

# அடிமை வாழ்வு பழகிப் போச்சு



புரையோடிய புண்களை மறந்துவிட்டு -
இன்றைய காயங்களுக்கு
மருந்திடுங்கள் என கதறும் கூட்டங்கள்.....

கண்ணிய மைந்தர்கள் கட்டிய கோட்டையை
உடைத்துவிட்டு இடுகாட்டில்
கொட்டிலிட்டு குதூகலிக்க நாட்டங்கள்....

அடிமையாய் இருக்க
பழகிப்போன பகுத்தறிவு....
அருகிப்போன ஆறறிவு....

திண்ணைப் பேச்சாய் மாறிப்போன வலைத்தளங்கள்...
குறிக்கோள் மறந்த நாற்காலி பிடிப்புக்கள்....
கொள்கையற்ற அரசியலும்
குழி பறிக்கும் எண்ணங்களும்....

கூலிக்கு மாறடிக்கும்
கண்ணிழந்த சட்டங்களும்...
காலம் மாறும் என்று காத்திருந்து பயனேது..!
காட்டாற்று வெள்ளமாக கழுவி செல்ல வேண்டுமன்றோ...

கனக தீபகாந்தன் – திருகோணமலை

# முன்னைத் தமிழின் மூச்சறுந்த நிலை என்னை ஏன் பிரசவித்தாயே தமிழச்சியே

எரிமலையாய் எரியும் என் உள்ளத் தீ
என்னை கேக்கிறது ஏனிந்த இழி
பிறப்பெடுத்தாயென

அடக்குமுறையின் அடையாள இருளில்
அடிமையின் சங்கிலி கோர்த்த
அவலத்தின் பிறப்பெனக்கு

எங்கள் நிலத்து வில்லுக்குளத்திடை வீசிவரும் காற்றிடமும்
கதைபேச தடைபெற்ற பிறப்பெனக்கு

எனை ஆளும் ஈசனவன் குடியிருக்கும்
கோணமாமலைக் கோவிலின் நிலை கண்டு
நிதம் நீர்மல்கும் பிறப்பெனக்கு

என் நிலத்து வெளிகளில் நடந்து போன என் அண்ணனை
காணவில்லையென காத்திருக்கும் பிறப்பெனக்கு

கடந்து போன நிகழ்வுகளால்
இழந்து போன என் கனவுகளை நினைத்து
கதறியளும் பிறப்பெனக்கு

இடுகாட்டில் இறையாய்யானவரை
படுபாவிகள் படும்பாட்டால் தழல் விளக்கெரித்து
நினைக்கமுடியா பிறப்பெனக்கு

காலங்காலமாய் இந்நிலை நீளும் நிலத்தில்
கருவிலே கலைக்காமல்
எனை ஏன் பிரசவித்தாய் தமிழச்சியே



யான் சம்பூர் தமிழ்க்கிறுக்கன்

# இலக்கிய ஆளுமை கவிஞர் ஷெல்லிதாசன்



வயதென்னடா வயதிங்கே
ஒரு வாலிப மென்பது மனசினிலே
உரங்கொள்கைகள் மேலெழுந்தால்
ஓர் மலை கூட பொடியாகும்!
வயதை வார்த்தையாக்கி எழுபத்தைந்திலும்
இளமை பொங்க கவி எழுதி வாழும்
கவிஞரை வாழ்த்தி மகிழ்கின்றேன்.
யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் உள்ள
தலையாளி இவரது பிறந்த இடம்.
17.05.1945ல் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை
யாழ்/கலட்டி மெதடிஸ்மிசன் பாடசா
லையிலும் இடைநிலைக் கல்வியை திரு
நெல்வேலி பரமேஸ்வராவிலும், உயர்
நிலை கல்வியினை யாழ்/கொக்குவில்
தொழில் நுட்ப கல்லூரியில் வர்த்தகமும்
நிதியியலும் கற்றார்.
1974ல் திருக்கோணமலைக்கு தொழில்
நிமித்தம் வந்து நீர்ப்பாசன பெருந்தெருக்கள்
திணைக்களத்தில் தொழிலாளர்
மேற்பார்வையாளராக பணியாற்றி
2007ல் முகாமைத்துவ உதவியாளராக
ஓய்வு பெற்றார்.
திருகோணமலை இவரது வாழ்விட
மானது.
தந்தை..பேரம்பலம். .. தாயார்.. பூரணம்
இவரது இயற்பெயர் பேரம்பலம் கனக
ரத்தினம்.
இவரது அறிவுசால் ஆசான்
தோழர் மு. காரத்திகேசன்
ஈழத்துச் சிறுவர் பாடலாசிரியர்களுள்
முக்கியமானவரான வித்துவான்
வேந்தனார் அவர்களிடம் கல்வி கற்ற
பெருமை இவருக்குண்டு.
ஈழத்து மூத்த தலைமுறை படைப்பாளி
களில் மிக முக்கியமானவர்களில் ஒருவர்.
கவிஞராக தன்னை இனம் காட்டிய இவர்
பத்துக்கு மேற்பட்ட சிறுகதைகள்
எழுதியுள்ளார்.
இவரது படைப்புகள்
தினக்குரல்,சுடரொளி,தினகரன்,
நீங்களும் எழுதலாம், கற்பகம்,
கவிஞன், செங்கதிர் ஞானம்,
ஜீவநதி போன்ற பத்திரிகை சஞ்சிகைகளில்
வெளிவந்திருக்கின்றன.
சிறுகதை எழுத்தாளராக 2018 ல் தன்னையும்
அடையாளப்படுத்தியவர்.
இவர் சமூக உணர்வுமிக்கதொரு பல்துறை
ஆளுமை மிக்க படைப்பாளி.
இவரது வில்லிசைப் படைப்புகள்
தமிழ் தின போட்டிகளில் வலய, மாகாண,
தேசிய மட்டத்தில் வெற்றி பெற்றுள்ளன.
இவரது மெல்லிசை பாடல்கள்
ஐம்பதுக்கு மேல்
இலங்கை வானொலியில் ஒலித்துள்ளது.
இனிமை ததும்ப அற்புத வரிகளில்
1972 காலப்பகுதியில் காலை 7 மணிக்கு
இலங்கை வானொலியில் இவரது பாடல்களை
கேட்டு ரசித்த நாள்களை எண்ணும் போது
மனம் எல்லை இல்லா ஆனந்தத்தில் மூழ்கின்றது.
இவரது பாடலுக்கு பிரபல இசையமைப்
பாளர் விஸ்வநாதன்.. ராமமூர்த்தி அவர்
கள் இசை அமைத்து பெருமை சேர்த்துள்ளார்.
நீங்களும் எழுதலாம் கவிதை சிற்றிதழ்
எஸ். ஆர். தனபாலசிங்கம் அவர்களை
ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது.
இச்சிற்றிதழில் கவிஞரின் கவிதைகள்
அநேக இதழ்களில் வெளிவந்தது குறிப்பிடத்
தக்கதொன்று. இச்சஞ்சிகை தமது வாசகர்
வட்டம் மூலம் நூற்றுக்கணக்கான நிகழ்வு
களை திருகோணமலையில் நடத்தியுள்ளது.
இந்நிகழ்வுகளில் கவிஞரின் பங்கு
பற்றல் அளப்பரியது.
இளமையில் தீவிர அரசியல் வேட்கை கொண்ட
இவர் கொக்குவில் தொழில்நுட்பக்
கல்லூரியில் கற்கின்ற நேரம்
கன்னி என்கிற ரோனியோ
சஞ்சிகையையும்,வணிக மலர்
என்ற மாணவ மன்ற
ஆண்டிதழையும் வெளியிட்டுள்ளார்.
தோழர் கார்த்திகேசனின் அரசியல்
வகுப்புகளில் கலந்து கொண்டு
பல தொழில்நுட்ப கல்லூரி மாணவர்களை
யும் பங்கு பெறச் செய்தவர்.
இடதுசாரி இயக்கப் பிரவேசம் மூலம் பல
முன்னணி எழுத்தாளர்கள்,அரசியல் அறி
ஞர்களோடு இவருக்கு ஏற்பட்ட நட்பு குறிப்பிடத்தக்கது.
தோழர்களான டானியல்,
நீர்வை பொன்னையன்,
க. தணிகாசலம் யோ.பெனடிற்பாலன்,
செ.யோகநாதன் நந்தினி சேவியர்,
சில்லையூர் செல்வராசன்,
சாருமதி,எஸ்.ஜி.கணேசவேல்
கே.ஏ.சுப்பிரமணியம்,இளங்கீரன் ,மாதகல் கந்தசாமி, ஜனகன்,
சி. கா.செந்திவேல்
இவர்களின் நட்புடன் தமது
இலக்கியப் பயணத்தை நடத்தியவர்.
இவரது மனைவி கனக.பாலதேவியும்
கவி புனைபவர். தினபதி கவிதா மண்டபம்
திருமலை சுந்தா அவர்களை
ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த
மானுடம் சிற்றிதழ் இவரின் கவிதைகளை
பிரசுரம் செய்துள்ளன.
மனைவியின் சகோதரி
இராஜம் புஷ்பவனம் அவர்களும்
ஆளுமைமிக்க படைப்பாளி ஆவார்.
மண்டூர் கவிஞர் சோமசுந்தரம் பிள்ளை
மண்டூர் தேசிகன் என்போரும் கால
ஓட்டத்தில் கவிஞரின் உறவினர்கள்
ஆயினர்.
பதும வயதில் ஒரு இந்தியப் பிராமணர்
குடும்பத்துடன் ஏற்பட்ட நட்பினால்
அவர்கள் விரும்பி வாசித்த கல்கி, குமு
தம், ஆனந்த விகடன்,அசோகமித்திரன்
கல்கண்டு, கண்ணன் போன்ற இந்திய
சஞ்சிகைகளும் கலைச்செல்வி, மல்லிகை,
புதினம், ஈழநாடு, சுதந்திரன் போன்ற
பத்திரிகை சஞ்சிகைகளும் இவரின்
வாசிப்புக்கு தீனியாகின.
ஜெயகாந்தன்,கு.பா.ரா,மௌனி
தா. பா, ல. ச. ராமமிர்தம் , புதுமைப்பித்
தன், கல்கி. சாண்டில்யன்,மு.வ போன்
றோரின் எழுத்துகளும் யாழ் நூலகத்தி
லிருந்து வே. சுவாமிநாத ஐயரின் கட்டு
ரைகளும், ரஷ்ய மொழிபெயர்ப்பு நாவல்
களும் கவிஞரை எழுத தூண்டின.
தோழா புறப்படு இவரது முதல் கவிதை
கன்னி சிற்றிதழில் பிரசுரமானது.
இன்று இவர் நூற்றுக்கணக்கான
கவிதைகளின் சொந்தக்காரர்.
சமூகம், ஏழ்மை, வர்க்க முரண்பாடு,
மொழி, இயற்கை என
இவரது கவிதைகளின்
உச்சத்தை அறிந்து கொள்ளலாம். .
வீண் வார்த்தை அலங்காரங்கள்
இவரிடம் காண்பது அரிது
சொல்ல நினைத்ததை சுவைபடச் சொல்லும்
சிறப்பு இவரது தனித்தன்மை என்பேன்.
திருகோணமலை முன்னோடிகள்
இலக்கிய குழுவில் செயல்பட்டவர்.
ஜோன் செல்வராஜா..நந்தினி சேவியர்..
இராஜ தர்மராஜா... தம்பி தில்லை முகிலன்
திருமலை நவம்... இராஜ்கபூர்... பவானந்தன்
நல்லை அமிழ்தன்....போன்றோர் இவரது
முன்னோடிகள் இலக்கிய குழு சகாக்கள்.
கவிதை அரங்குகள்.. விமர்சன அரங்குகள் ...
இவைகளில் இவரது குரல் அழுத்தமாக
ஒலிப்பதைப் பார்த்து நான் அந்த
நாள்களில் வியந்ததுண்டு
புதுமை நெஞ்சங்கள்
இலக்கிய குழுவினரால்
நடத்தப்பட்டு வந்த கவியரங்குகளில்
இவரது வருகையும்.. கவி சொல்லும்
லாவகமும் என்னை அவர் மேல்
நட்பு கொள்ள வைத்தது.
புதுமை நெஞ்சங்கள் இலக்கிய குழுவினரான
கவிஞர். செ.நவசோதி ராசா,
திருமலை சுந்தா , கவிஞர் க.கோணேஸ்வரன்,
கனகசபை தேவகடாட்சம், கவிஞர் கெஜ. தர்மா மற்றும்
கேணிப்பித்தன் அருளானந்தம்
கௌரிதாசன், கௌரிபாலன்
வீ. என். சந்திரகாந்தி, தாமரைத்தீவான்
போன்றோருடன் இலக்கிய நட்பினை
பேணியவர்.
வவுனியாவில் வழிகாட்டிகள் இலக்கிய
குழுவினரின் இலக்கிய நிகழ்வுகளுக்கு
திருக்கோணமலையில் இருந்து நானும்
கவிஞர் செ. நவசோதிராசா அவர்களும்
செல்வது வழக்கம். அங்கு இவரது அறிமு
கம் எனக்குக் கிட்டியது. நடைபெற்ற கவிய
ரங்கு ஒன்றில் அவருடன் நானும் கலந்து
கொண்டேன்.
கவியரங்குகள் பல கண்டவர். சிறந்த
மேடை பேச்சாளர்.
இவரது முதலாவது சிறுகதை
ஒளியைத் தேடி கன்னி சிற்றிதழில்
வெளியானது. இவர் செம்மாதுளன்,
கனெக்ஸ் என்கிற புனைப்பெயர்களி
லும் எழுதியுள்ளார்.
(1) செம்மாதுளம்பூ ( கவிதை நூல்) 2010
(கிழக்கு மாகாண இலக்கிய பரிசு பெற்றது. பதிப்பு..
நீங்களும் எழுதலாம்
வெளியீடு)
(2) நகர வீதிகளில் நதிப் பிரவாகம் ..2013
கவிதை நூல்
(3) வண்ண வண்ணப் பூக்கள்.. 2015
(சிறுவர் பாடல் நூல் ...
2015 அரச சாகித்திய விருது,
வவுனியா இரா. உதயணன் இலக்கிய
விருது பெற்றது)
(4) எங்களில் ஒருத்தி.. சிறுகதைத் தொகுதி
2017..பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.. வெளியீடு
(5) பல்கலைச் செல்வி இராஜம் புஸ்பவனம்
படைப்புகள் நூலின் தொகுப்பாசிரியர்..
வெளியீடு.. ஆனந்தரஜனி ..2017.
ஆகிய நூல்களின் சொந்தக்காரர்
ஈழத்துப் பத்திரிகைகள்.. சஞ்சிகைகளில்
இவரது எழுத்துகளை அவதானித்திருக்
கின்றேன்.
இவரது மகன் கனக. தீபகாந்தனும்
இலக்கிய சாதுர்வம் மிக்கவர்.
இளஞாயிறு என்கிற சிற்றிதழை
வெளியிட்டுள்ளதை நானறிவேன்.
கலாபூசண விருது
அரச சாகித்திய விருது
வித்தகர் விருது
நகர முதல்வர் விருது
கலைமாமணி விருது
இப்படி பல விருதுகளைப் பெற்றவர்.
இலக்கிய சந்திப்புகளில் இவரது உரையாடல்
காத்திரமானதாக இருக்கும். இதனை
பல தடவைகள் நேரில் அவதானித்துள்ளேன்.
மனம் நோகப் பேசத்தெரியாதவர்.
தனது நிலைப்பாட்டில் இருந்து இம்மியும் பிசகாதவர்.
உள்ளொன்று வைத்து புறமொன்று
பேசாதவர்.
தனது கொள்கை.. கோட்பாடுகளில்..
பேச்சொன்று செயலொன்றாய்....
வாழாதவர்.
வித்துவ செருக்கற்றவர். இலக்கிய வீண்
வம்புகளுக்கு போகாத அமைதி போக்குள்
ளவர். .
சோம்பலென்பதை நானறியேன் எந்த
சொந்தத்தை நம்பியும் நான் வாழேன்
வீழும் வரையும் நானோயேன் அதற்கு
வேண்டும் திடங்கொள் மனசிருக்கு!
என்ற அவரது கவிதை வரிகளோடு....
எனது இலக்கிய நண்பர்களில் ஒருவராய்
என் மனத்தில் நிறைந்து வாழுகின்ற....
பவளவிழா நாயகனை வாழ்த்தியே.

திருமலை சுந்தா

# இலங்கை இனப்பிரச்சினையின் தீர்விற்கு இந்திய மத்திய அரசின் அழுத்தம் தேவை

## இலங்கை வட கிழக்கு ஆயர் மன்றம் தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு மடல்

இலங்கை தமிழர் நலனுக்கு ரூ.317 கோடி ஒதுக்கீடு என சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் 27 ஒகஸ்ட் 2021 அன்று 110 ஆவது விதியின் கீழ் அறிவித்த பின்னர் இலங்கை வட கிழக்கு ஆயர் மன்ற நான்கு ஆயர்களும் ஒப்பமிட்டு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கு மடல் ஒன்றை அனுப்பியுள்ளனர். அதில் -

* தொடர்ந்தும் தமிழகத்தில் வாழ விரும்புகின்றவர்களுக்கு நிரந்தர இந்தியக் குடியுரிமை.

* இலங்கையில் மீளக் குடியேற விரும்புவோர்க்கு குடியேற்றம்.

* இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் துயர் துடைப்பு பணி.

* மலையகத் தமிழர்களின் கல்வி மற்றும் வாழ்வாதார விருத்திக்கு உதவிகள்.

- போன்ற விடயங்களை ஆயர் மன்றம் வலியுறுத்தியுள்ளது.

இவ்வாரக் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழில் இலங்கை வட கிழக்கு ஆயர் மன்ற மடலின் முழுமையையும் அதற்கு முன்னர் தமிழக முதல்வர் சட்ட சபையில் ஆற்றிய உரையின் சுருக்கத்தையும் நோக்குவோம்.:-

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு,

இலங்கை வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ்க் கத்தோலிக்க ஆயர்கள் ஒன்றியம் தமிழக முதல்வர் மரியாதைக்குரிய மு. க. ஸ்டாலின் ஆகிய உங்களுக்கும், தமிழ்நாடு சட்டமன்ற ஆளும் கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் எங்களது மனமார்ந்த பாராட்டினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெரிதும் உவகையடைகிறது.

27.08.2021 அன்று நடைபெற்ற தமிழக சட்டமன்ற கூட்டத்தொடரில் தாங்கள் தமிழ் நாட்டில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக ஆற்றிய உரையானது இலங்கையில் வாழ்கின்ற அனைத்துத் தமிழர்களுக்கும் புதிய உத்வேகத்தையும் மகிழ்வினையும் தந்துள்ளது. அன்றைய சட்டமன்றக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம்கள் இனி வரும் நாள்களில் - இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்கள் - என்று அழைக்கப்படுமெனக்கூறி அரசாணை பிறப்பித்த செய்தியானது எங்களை மிகுந்த மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

அதுமட்டுமல்லாது அவர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்குத் தேவையான வீடு, உட்கட்டமைப்பு வசதிகளாகிய குடிதண்ணீர், மின்சாரம், கழிப்பிட வசதிகள், பொறியியல் கல்வி மற்றும் கல்விக்கான ஊக்குவிப்புத் தொகை, வேலைவாய்ப்பு, வாழ்க்கைத்திறன் மேம்பாடு, விலையில்லா எரிவாயு, விலையில்லா அரிசி, அகதிகளுக்கான ஆலோசனைக் குழு போன்ற நலத்திட்டங்களையும் அறிவித்துள்ளமையானது மிக நீண்ட காலமாகவே தமிழ்நாட்டு அகதி முகாம்களில் சொல்லொண்ணாத் துயரங்களை அனுபவித்த எங்கள் மக்களுக்கு மிகுந்த ஆறுதலையும், மகிழ்வினையும் கொடுத்துள்ளது. இத்தகைய தங்களது அறிவிப்புகளுக்காகவும் அவற்றின் செயலாக்கத்திற்காகவும் இலங்கை வடக்கு, கிழக்கு தமிழ் ஆயர்கள் மன்ற உறுப்பினர்களாகிய நாம் தங்களுக்கும் தங்களது அரசிற்கும் எங்களது மனமார்ந்த நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழகத்தில் வாழ்கின்ற ஈழத் தமிழர்கள் குறித்து இன்னும் இரண்டு விடயங்களில் தங்களின் அரசு கவனம் செலுத்த வேண்டுமென அன்பான வேண்டுகோளையும் தங்களுக்கு முன்வைக்கின்றோம். அவையாவன, முதலாவதாக, தொடர்ந்தும் தமிழகத்திலேயே வாழ விரும்புகின்றவர்களுக்கான நிரந்தர இந்தியக் குடியுரிமையினைப் பெறுவதற்கான வழிவகைகளைச் செய்து கொடுத்தல்.

இரண்டாவதாக, இலங்கையில் தங்களது சொந்த வாழ்விடங்களில் மீளக் குடியேற விரும்புகின்றவர்களுக்கு மீளக்குடியேற்ற முயற்சிகளை முன்னெடுப்பதும், அவர்களைப் பாதுகாப்பான முறையில் அவ்விடங்களில் குடியேற்றுவதுமாகும். இவ்விடயங்களில் தங்களது மேலான கவனத்தை இனிவரும் நாள்களில் செலுத்துவீர்கள் என்று உறுதியோடு நம்புகிறோம்.



இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் நடைபெற்ற கொடிய இனச்சுத்திகரிப்பு யுத்தத்தின் வடுக்களால் சொல்லொண்ணாத் துன்பங்களுடன் வாழ்கின்ற மக்களின் துயர்துடைப்பு பணிக்கும் உதவவேண்டுமெனக் கேட்டு நிற்கின்றோம். அதனினும் மேலாக இலங்கையில் புரையோடிப் போயுள்ள இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினை எட்டுவதில் 1987ஆம் ஆண்டில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தால் எட்டப்பட்ட வடக்குக்கிழக்கு இணைந்த சுயாட்சியுடன் கூடிய மாகாண அமைப்பு முறைமை வலுப்பெற இந்திய மத்திய அரசுக்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமெனவும் கேட்டு நிற்கின்றோம்.

இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற மலையகத் தமிழர்களின் நலன்களிலும் அக்கறை கொண்டவர்களாக, அவர்களின் கல்வி, மற்றும் வாழ்வாதார விருத்திக்கு முன்வந்து உதவிகள் நல்கிட வேண்டுமென மிகுந்த விருப்புடன் கேட்டு நிற்கின்றோம். இலங்கையில் மாறிமாறி வருகின்ற அரசுகளால் ஏமாற்றப்படுகின்ற, வஞ்சிக்கப்படுகின்ற அவர்களின் வாழ்வில் வசந்தம் ஏற்படுவதற்கான காத்திரமான முடிவுகளையெடுத்து தேவையேற்பட்டால் இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து அவற்றையும் செயல்படுத்த முன்வர வேண்டுமென்ற கோரிக்கையினையும் முன்வைக்கின்றோம்.

தாங்கள் ஆரம்பித்துள்ள தமிழக ஆட்சியானது மக்களுக்கு இன்னும் பல நன்மைகளை விளைவிக்கவும், அதனால் தமிழகம் இந்தியாவில் மிகவும் செழிப்புற்ற மாநிலமாக மிளிரவும் வாழ்த்தி நிற்கின்றோம். தங்களது நல்லாட்சிக்கு இறையாசீர் என்றும் கிடைப்பதாக. - என்று உள்ளது.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

# இலங்கைத் தமிழர் நலனுக்காக ரூ.317 கோடி சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு!

இலங்கைத் தமிழர் நலனுக்கு 317 கோடி ரூபா திட்டம் ஒன்றை தமிழக அரசு 27 ஒகஸ்ட் 2021 அரசு வெளியிட்டது. இது தொடர்பில் சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் விடுத்த அறிவிப்பு வருமாறு:-

1983ஆம் ஆண்டு முதல் இதுவரை 3 லட்சத்து 4 ஆயிரத்து 269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். இவர்களில், 18 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சார்ந்த 58 ஆயிரத்து 822 பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களில் 108 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 13 ஆயிரத்து 540 குடும்பங்களைச் சார்ந்த 34 ஆயிரத்து 87 நபர்கள் காவல் நிலையங்களில் பதிவு செய்து, வெளிப்பதிவில் வசித்து வருகிறார்கள்.

முகாம்களில், மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7 ஆயிரத்து 469 வீடுகள், 231 கோடியே 54 லட்சம் ரூபா செலவில் புதிதாகக் கட்டித்தரப்படும்.

இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்திட 30 கோடி ரூபா நிதி மற்றும் வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதியாக 5 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

பொறியியல் படிப்பு பயிலுவதற்கு மதிப்பெண் அடிப்படையில், முதல் 50 மாணவர்களுக்கு, அனைத்துக் கல்வி மற்றும் விடுதிக் கட்டணம் ஆகியவற்றை அரசே ஏற்கும். மேலும், வேளாண், வேளாண் பொறியியல் பட்டப்படிப்பிலும் முதல் 5 மாணவர்களுக்கும், மேற்சொன்ன கட்டணங்களை அரசே ஏற்கும்.

பாலிடெக்னிக் படிப்பிற்கு 10 ஆயிரம் ரூபா, இளநிலை கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பிற்கு 12 ஆயிரம் ரூபா, இளநிலை தொழில்சார்ந்த படிப்புகளுக்கு 20 ஆயிரம் ரூபாவாகவும் உயர்த்தி வழங்கப்படும். இதற்காக 1 கோடியே 25 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு, மாதந்தோறும் வழங்கப்படும் பணக்கொடை இனி குடும்பத் தலைவருக்கு மாதந்தோறும் 1,500 ரூபா, இதர பெரியவர்களுக்கு 1,000 ரூபா மற்றும் 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 500 ரூபா என்று உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசிற்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக 21 கோடியே 49 லட்சம் ரூபா செலவாகும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு அடுப்பு வழங்க அரசிற்கு ஒருமுறை 7 கோடி ரூபா செலவினம் ஏற்படும். குடும்பத்திற்கு 5 எரிவாயு உருளைக்குத் தலா 400 ரூபா வீதம் மானியத் தொகை வழங்க 3 கோடியே 80 லட்சம் ரூபா ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு அரிசி விலையில்லாமல் வழங்கப்படும். இதற்கான செலவுத் தொகையான 19 லட்சம் ரூபாயையும் அரசே ஏற்கும்.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கோஆப்டெக்ஸ் மூலம் குடும்பம் ஒன்றிற்கு 1,790 ரூபாவிலிருந்து, குடும்பம் ஒன்றுக்கு, 3,473 ரூபாவாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக அரசிற்கு ஆண்டொன்றுக்கு 3 கோடி ரூபா கூடுதல் செலவினம் ஏற்படும்.

முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு 1,296 ரூபா மதிப்பில் பாத்திரங்கள் வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஒரு கோடியே 97 லட்சம் ரூபா கூடுதலாக செலவினம் ஏற்படும்.

முகாம்களில் வசிக்கும் இலங்கை அகதிகளுக்கும் வெளிப்பதிவில் உள்ள அகதிகளுக்கும் உதவிகளை வழங்கிட ஒரு ஆலோசனைக்குழு அமைக்கப்படும்.

முகாம் வாழ் இலங்கைத் தமிழர் நலனைப் பேணிட 261 கோடியே 54 லட்சம் ரூபா, கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்கு 12 கோடியே 25 லட்சம் ரூபா, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட 43 கோடியே 61 லட்சம் ரூபா என மொத்தம் 317 கோடியே 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்திடும் என்த் தெரிவித்துக் கொள்கிறேன். - என்றார்.

நன்றி: மாலைமலர்

காலைக்கதிர் Kalaikkathir



# உலக உளநல தினம் இன்று

- க.கபில்ஸ்ரன் -
(உளவியல் துறை மாணவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

உலக உளநல தினம் வருடம் தோறும் ஒக்ரோபர் 10 இல் கொண்டாடப்பட்டு வருகின்றது. முதன்முதலில் 1992 ஆம் ஆண்டு உலக உளநல மையத்தினால் உலக உளநல தினம் கொண்டாடப்பட்டது.

நாம் உடல் நலத்துக்குக் கொடுக்கும் முக்கியத்து வத்தை உளநலத்திற்கு கொடுக்கின்றோமா? உடலும் உள்ளமும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை என் பதை நாம் எண்ணுவது கிடையாது. உடலும் உள்ள மும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. உடலிற்கு ஏதும் காயம் ஏற்பட்டால் நாம் மருத்து வரை நாடுகிறோம். ஆனால் உள நலத்திற்கு பாதிப்பு ஏற்படுகின்றபோது அதற்கு நாம் என்ன செய்கின்றோம் என்பது கேள்விக்குறியான ஒன்றாகும்.

மேலைத்தேய நாடுகளில் மனதளவில் ஏற்படு கின்ற பிரச்சினைகள் அல்லது மனதளவில் ஏற்படு கின்ற பிரச்சினைகளை எவ்வாறு வெற்றி கொள்வது என்பது தொடர்பாக ஓர் உளவளத்துணையாளரை நாடுவார்கள். ஆனால் எமது நாடு போன்ற கீழைத்தேய நாடுகளில் மனதளவில் ஏற்படுகின்ற பிரச்சினைக ளுக்கு ஓர் உளவளத்துணையாளரை நாடுகின்றோமா என்று கேட்டால் அதற்குப் பதில் இல்லை என்றே சொல்வோம்.

அவ்வாறு உளநலத்தின் தேவையை உணர்ந்து ஒரு உளவளத்துணையாளரை நாடுகின்ற போது எமது சமூகத்தின் பார்வை எவ்வாறு உள்ளது. உள வளத் துணையாளர் இருக்கின்ற பக்கம் சாதாரண மாக சென்றால் கூடவே 'இவருக்கு ஏதோ பிரச்சினை யாம்' என்றுதான் எமது சமூகத்தின் புலக்காட்சி காணப்படுகிறது.

நிச்சயமாக ஒவ்வொரு மனிதனுக்கும் உள நலத் தின் தேவை என்பது மிக முக்கியமானதாகும். அன்றாடச் செயற்பாடுகள் முதல் அரசியல் செயற்பாடுகள் வரை அனைத்திற்கும் உள நலத்தின் முக்கியத்துவம் முதன்மையானது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) இன் கூற்றுப் படி ஆரோக்கியமான மனிதன் எனப்படுபவன் யாரெ



னில் உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக நலத்தை உடைய ஒரு மனிதனே ஆவான்.

1952ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அமெரிக்க உளநல மருத்துவர் சங்கத்தின் உளநோய்கள் தொடர் பான ஆய்வுகள் மற்றும் புள்ளிவிவரக் கையேட்டில் உளநோய்கள் என்றால் என்ன? உளநோய்கள் எவை? அதற்கான அங்கீகரிக்கப் பட்ட சிகிச்சை முறைகள் எவை? - என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. இவை சர்வதேச ரீதியில் அங்கீக ரிக்கப்பட்டவையாகும்.

அந்தவகையில் உளநோய்கள் இரு வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று எளிய அல்லது சாதாரண உளநோய்கள், மற் றையது பாரிய உளநோய்கள் என வரையறுக்கப்பட்டுள்ளன.

பித்து, மனச்சோர்வு, இருதுரு வக்கோளாறு, சுற்றுக்கோளாறு, தீவிர உளமாய நோய், நாள்பட்ட உளமாய நோய் போன்றவை பாரிய உளநோய்கள் எனவும் பதகளிப்பு, பாலியல் உளநோய்கள், உடல்மெய்பாட்டு உளநோய்கள், ஆளுமை உளக்கோளாறுகள் போன்றவை எளிய உள நோய்கள் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

உலக நாடுகள் அனைத்திலுமே ஒரு குடும்பத் தில் ஒருவர் உளநோயினால் பாதிப்புள்ளாகி இருக்கிறார் என அறிவிக்கப்படுகிறது. அத்துடன் உலகசனத்தொகையில் நான்கு பேரில் ஒருவர் உளப்பாதிப்புக்கு ஏதோ ஒரு வகையில் ஆளாகியிருக்கிறார் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இது உளநல பாதிப்பு நிலையானது பரவலான நிலையில் உள்ளதென்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

உள நலத்தின் முக்கியத்துவத்துக்கு உளவளத் துணை இன்றியமையாதது.

உளவளத்துணையானது, உடல், உளநோய்களுக் குக் காரணமான மன அழுத்தத்தைக் குறைக்க உத வும். சமூகக் கலாச்சார மாற்றங்களுக்கேற்ப தம்மை இயைபாக்கம் செய்து கொள்ள முடியாதவர்களுக்கு வழிகாட்டி, நவீன மாற்றங்களுக்கேற்ப அவர்களை இயைபடையச் செய்ய உதவுதல். குடும்பத்தில் நிலவும் பிரச்சினைகளிலிருந்து குடும்பங்களைக் காப்பாற்றி உடல், உள, சமூக, ஆன்மீக வளமிக்க குடும்பங்களை கட்டியெழுப்புவதில் துணை நிற்றல். ஆளிடைத் தொடர்பு களை வளர்த்துக் கொள்ள உதவுதல். குடும்பத்தில் நிலவும் உளவியல் ரீதியான இடைவெளிகளை நீக்கி ஓர் சிறந்த குடும்ப அமைப்பை உருவாக்க உதவுதல் என்பனவாம்.

உடல் நலத்திற்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுக் கிறோமோ அதே அளவிற்கு உள நலத்திற்கும் முக்கி யத்துவம் கொடுத்து உலகை வெல்வோம்.

# போக்குவரத்துச் சபையினால் ரூ. 9 கோடி மேலதிக செலவு!

மோசடிகள் அம்பலம்

இலங்கை போக்குவரத்துச் சபையில் 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற கணிணி கொள்வனவின் போது மதிப்பிடப்பட்ட தொகையை விட 9 கோடி ரூபா மேலதி கமாக செலவு செய்யப்பட்டமையை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் குழு கண்டறிந் துள்ளது.

கணிணி மற்றும் உபகரண கொள்வனவின் கார ணமாக பல கோடி ரூபா மேலதிகமாக செலவிடப்பட் டுள்ளதாக கோப் குழு தெரிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்து சபை 2018ஆம் ஆண்டு 139 கணிணிகள், 74 மடிக்கணிணிகளை ஒரு கோடியே 52 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய் வதற்கு கொள்முதல் சபை மதிப்பீடு செய்திருந்தபோது, இத்தொகையைவிட அதிகமான தொகைக்கே கணிணி கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய 800 கணணிகளும், 47 மடிக்கணிணி களும் 11 கோடியே 33 லட்சத்து மூவாயிரத்து 750 ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதனால் 2018 ஆம் ஆண்டு கணிணிகளின் கொள்வனவுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொகையை விட 8 கோடியே 99 லட்சத்து 77 ஆயிரத்து 500 ரூபா போக்குவரத்து சபையின் கணக்கின் ஊடாக செலவு செய்யப்பட்டிருப் பதாக கோப் குழுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை தொடர்பான 2017, 2018 ஆம் நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் நாய கத்தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய நிலை மைகள் தொடர்பாக ஆராய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தலைமையில் கோப் குழு கூடியபோதே இந்த விடயம் வெளிப்பட்டுள் ளது. உரிய செயல்முறை இல்லாமல் பணத்தை செல வழிப்பது தொடர்பில் கோப் தலைவர் தனது அதிருப் தியை வெளிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், 125 சொகுசு பஸ்களுக்கு கமரா மற்றும் ஜீ.பி.எஸ். கட்டமைப்பைப் பேணுவதற்குத் தேவையான கருவிகளைக் கொள்வனவு செய்ய தனியார் நிறுவனத் துடன் மூன்று கோடியே 36 லட்சத்து 28 ஆயிரத்து 840 ரூபாவுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இருந்தபோதும் இந்தக் கருவிகளில் சிலவற்றைத் தவிர ஏனையவை இயங்கும் நிலையில் காணப்பட வில்லையென்றும் கோப் குழுவில் தெரியவந்தது. விசேடமாக இந்த பஸ்களில் பணியாற்றுபவர்கள் வேண் டுமென்றே சேதத்தை ஏற்படுத்துகின்றனர் என அதி காரிகள் தெரிவித்தனர்.

2018 ஆம் ஆண்டு கொள்முதல் திட்டத்துக்கு அமைய 1,000 இலத்திரனியல் பஸ் டிக்கெட் இயந்திரங்களுக்கு 3.5 கோடி ரூபா ஒதுக்கப்பட்டு கொள்வனவு செய்வ தற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு பணிப்பாளர் சபையின் அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும் 2018ஆம் ஆண்டு 2 ஆயிரம் இலத்தி ரனியல் பஸ் டிக்கெட் இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய 7 கோடியே 59 லட்சம் ரூபா செலவு செய்யப் பட்டுள்ளது.

இதற்கமைய அனுமதியின்றி 1,000 இலத்திரனியல் பஸ் டிக்கெட் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப் பதுடன், இந்தக் கொள்வனவின் ஊடாக எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறாமை தொடர்பில் குழு கவனம் செலுத்தியது.

இது தொடர்பில் ஒரு மாதத்துக்குள் கோப் குழுவுக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டது. அத்துடன், பணிப்பாளர் சபையின் பதவிகள் சிலவற்றின் குறைபாடுகள் தொடர்பாகவும், பயன்பாட்டில் இருக்கும் ஐயாயிரத்து 921 பஸ்களின் எண்ணிக்கை தொடர்பிலும், தற்பொழுது பயன்பாட்டி லிருந்து நீக்கப்பட்டுள்ள பஸ்கள் மற்றும் 10 வருடங்கள் பழைமைவாய்ந்த இரண்டாயிரத்து 742 பஸ்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.



# பொது அறிவு வாராந்த ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பகுதியில் பத்து பொதுஅறிவு வினாக்கள் இடம்பெறும். கேள்விக்குரிய உங்கள் பதில்கள் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை பிரசுமாகும்.
சனிக்கிழமை காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு உங்கள் விடைகளை அனுப்பி வையுங்கள்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகிய வற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

1. ஓர் எண்ணின் இரட்டை மடங்குடன் 20 ஐ கூட்டியபோது 140 பெறப்பட்டது அவ்வெண் யாது?
2. 220, 212, 198, 178, 152, .... என்ற எண் தொடரின் அடுத்துவரும் இரு எண்களும் எவை?
3. 2020 ஐ.பி.எல்லில் பிளே ஓவ் சுற்றுக்கு நுழைந்து 2021 ஐ.பி.எல்லில் நுழையாத அணிகள் எவை?
4. தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்?
5. உலக அஞ்சல் தினம் எப்போது?
6. 11 cm ஒரு பக்க நீளமுடைய சதுரக்கம்பியை வட்ட வடிவக்கம்பியாக மாற்றும் போது அவ் வட்டவடிவக் கம்பியின் ஆரை யாது?
7. உலகில் உள்ள நாடுகள் எத்தனை?
8. இலங்கையின் முதல் ஜனாதிபதி யார்?
9. வடக்கின் தற்போதைய ஆளுநர் யார்?
10. ஒரு நாளில் எத்தனை செக்கன்கள்?

**பெயர் :-** ..........................................
**முகவரி :-** ........................................
**தொலைபேசி இலக்கம்:-** ....................
**அடையாள அட்டை:-** ........................
**மின்னஞ்சல் முகவரி:-** ......................

## 03.10.2021ஆம் திகதி பிரசுரமான பொது அறிவு வினாக்களுக்கான விடைகள்

1. 77, 110
2. 17
3. 75
4. 10 ஆம் திகதி
5. சென்னை சூப்பர் கிங்ஸ்
6. ஒக்ரோபர் 02
7. ஒக்ரோபர் 01
8. ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான்
9. 30
10. மர அணில்

## சரியான பதிலளித்தவர்கள் விவரம் -

| | | |
|---|---|---|
| 1. ரி.சராதரன் | குப்பிளான் | 10 |
| 2. ஜெ. அக்ஷிதா | வாழைச்சேனை | 10 |
| 3. வி.விஷ்ணுகோவன் | வட்டுக்கோட்டை | 08 |
| 4. கே.டிருஷி | உடப்பு | 09 |
| 5. எஸ். கருணாநிதி | யாழ்ப்பாணம் | 08 |
| 6. எஸ். சதுர்ஜினி | அல்வாய் | 10 |
| 7. வி.வினோதினி | மட்டக்களப்பு | 10 |
| 8. கே.அனுஷன் | ஏழாலை | 09 |
| 9. வி.வினோத்குமார் | மட்டக்களப்பு | 10 |

# புலிகளால் எவ்வித சொத்துக்களும் வழங்கப்படவில்லை அவை இருந்திருந்தால் மக்களைக் காப்பாற்றி இருப்பேன்

## கே.பி. இப்படிக் கருத்து

யுத்தம் முடிவடைந்த போது தமிழீழ விடுதலைப் புலிகளால் தனக்கு எவ்வித சொத்துக்களும் வழங்கப்படவில்லை என புலிகள் அமைப்பின் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளராக இருந்த குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி - செஞ்சோலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இறுதி யுத்த காலத்தில் தான் மலேசியாவில் தலைமறைவாகியிருந்த போது தன்னிடம் எந்த சொத்தையும் புலிகள் வழங்கியிருக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

அவ்வாறு சொத்து இருந்திருந்தால் இந்த அழிவில் இருந்து மக்களைக் காப்பாற்றி இருப்பேன் என்றும் குமரன் பத்மநாதன் குறிப்பிட்டார்.

இதேவேளை புலம்பெயர் தமிழ் மக்களுக்கு அண்மையில் ஜனாதிபதி விடுத்த அழைப்பை வரவேற்பதாகத் தெரிவித்த அவர், இந்த வாய்ப்பை நழுவவிடாமல் படிப்படியாகக் கைகோர்த்து பயணிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# சந்தேகத்துக்கிடமான முறையில் அராலியில் இராணுவ நடமாட்டம்

## விசாரணை ஆரம்பிப்பு

யாழ்ப்பாணம் – அராலி பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் காரில் சுற்றிய இரு இராணுவ வீரர்களை பொதுமக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை அராலி தெற்கு பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

குறித்த பகுதியில் கார் ஒன்றில் இருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் சுற்றித் திரிந்துள்ளனர்.

இதனால் அவர்களை வழிமறித்த அப்பகுதி மக்கள், அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது, தாம் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும், தாம் இயக்கச்சி இராணுவ முகாமில் கடமையாற்றுபவர்கள் என்றும் தற்போது விடுமுறையில் இப்பகுதிக்கு வந்துள்ளோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

அதில் சந்தேகம் அடைந்த பொதுமக்கள், வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கி இருவரையும் அவர்களிடம் ஒப்படைத்தனர்.

அதன்பின்னர் இருவரையும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்ற பொலிஸார், இருவரும் இராணுவத்தில் தற்போதும் கடமையாற்றுபவர்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர் அவர்களை பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

இதேவேளை விடுமுறையில் சென்றவர்கள் எதற்காக அராலிப் பகுதிக்கு காரில் சென்றனர் என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.





| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| **வயது** : 30 வயது ஆண்<br>**மதம்** : இந்து<br>**ஜாதி:** வேளாளர்<br>**நட்சத்திரம்:** சித்திரை<br>**செவ்** : குற்றம் இல்லை<br>**தொழில்:** கனடா<br>**எதிர்பார்ப்பு:**<br>பொருத்தமான மணகள் | **வயது** : 31 பெண்<br>**மதம்** : இந்து<br>**ஜாதி** : வேளாளர்<br>**நட்சத்திரம்** : அஸ்வினி<br>**தொழில்** : கனடா<br>**எதிர்பார்ப்பு :**<br>உள்நாடு / வெளிநாடு மணமகன் |
| **வயது** : 40 வயது ஆண்<br>**மதம்** : இந்து<br>**ஜாதி:** பள்ளர்<br>**நட்சத்திரம்:** மிருகசீரடம்<br>**தொழில்** : கனடா<br>**எதிர்பார்ப்பு:**<br>பொருத்தமான மணமகள் | **வயது** : 31 பெண்<br>**மதம்:** இந்து<br>**ஜாதி** : வேளாளர்<br>**நட்சத்திரம்** : மகம்<br>**தொழில்** : ஆசிரியை<br>**எதிர்பார்ப்பு :**<br>உள்நாட்டு படித்த மணமகன் . |

**0776505097**
**0778876969**

**தலைமை அலுவலகம் ;**
**கனடா**
**0014166661855**

# நல்லிணக்கத்திற்காக உழைத்த விஜயகுமாரணதுங்க!

## சினிமாவிலிருந்து அரசியலுக்கு வந்த ஆளுமை!!



**நேற்று ஒக்ரோபர் 09 பிறந்த தினம்**

**- முருகபூபதி -**

(நேற்றைய தொடர்ச்சி)

அச்சமயத்தில் கட்சியின் பீரங்கியாக விஜயகுமாரணதுங்க விளங்கினார். கட்சியின் வளர்ச்சிக்காக மூவின மக்களுடனும் இணைந்து பாடுபட்டார். இக்காலப்பகுதியில் அவருக்கும் ஸ்ரீமாவின் இரண்டாவது புதல்வி சந்திரிக்காவுக்கும் காதல் மலர்ந்தது. இதனை சந்திரிக்காவின் தாயும் - தம்பி அநுராவும் விரும்பவில்லை. அத்தனகல்ல வளவ்வையின் மேட்டுக்குடி, ஒரு சாதாரண குடும்பத்திலிருந்து வந்தவரை தங்கள் அரசியலுக்கு பயன்படுத்துவதற்கு மாத்திரமே விரும்பியது. அவரை ‘மச்சான் ’ என அழைப்பதற்கு அநுரா விரும்பவில்லை.

கட்சிக்குள் விஜயகுமாரணதுங்கவின் பிரவேசமும் வளர்ச்சியும் மூத்த தலைவராக இருந்தவரும் ஸ்ரீமா வெளிநாடு செல்லும் சந்தர்ப் பங்களில் பதில் பிரதமராக இருந்தவருமான மதவாச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சேனாநாயக்காவும் விரும்பவில்லை. ஸ்ரீமாவின் குடியியல் உரிமை பறிக்கப்பட்டதால் அடுத்த தலைவர் யார்? என்ற போட்டி உட்கட்சிப் போராட்டமாகியது. 1978 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ.சு.கட்சியின் சார்பில் ஹெக்டர் கொப்பேகடுவ போட்டியிட்டபோது அநுரா பிரசாரங்களுக்கு வரவில்லை. விஜயகுமாரணதுங்க யாழ்ப்பாணம் உட்பட நாடெங்கும் சென்று கட்சிக்காகவும் ஹெக்டர் கொப்பேகடுவவுக்காகவும் தீவிரமாக பிரசாரம் செய்தார். மைத்திரி - அநுராவசம் கட்சி சென்றபோது, வீட்டில் அணிந்திருந்த சாரத்துடனேயே தனது ஆதரவாளர்களுடன் ஓடிவந்து மருதானை டார்லி வீதியிலிருந்த கட்சியின் தலைமையகத்திற்கு முன்னால் போராட்டம் நடத்தினார். சரிந்துகொண்டிருந்த கட்சியை நிமிர்த்துவதற்கு பாடுபட்ட விஜயகுமாரணதுங்க, இறுதியில் அக்கட்சியிலிருந்து வெளியேறி மக்கள் கட்சியை தொடங்கி தனிவழிசென்றார். சந்திரிக்காவும் ஒஸி அபேகுணசேகராவும் அவருக்கு பக்கபலமாக நின்றனர்.

அன்றைய ஜே. ஆர். தலைமையிலான ஐ.தே. கட்சி 1977 இல் பதவிக்கு வந்த காலம் முதல் 1977 - 1981 - 1983 முதலான ஆண்டுகளில் இலங்கையில் இனக்கலவரம் வந்தது. 1977 இல் நடந்த கலவரத்தின்போது ‘போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்’ என்ற பிரகடனம் செய்த ஜே.ஆர். 1978 முதல் 1989 வரையில் ஜனாதிபதியாக பதவியில் இருந்தவர். இவரது ஆட்சிக்காலத்தில்தான் இலங்கை பாரிய நெருக்கடிகளை சந்தித்தது. 1983 இல் கொழும்பிலும் புறநகரங்களிலும் தமிழர்கள் கொல்லப்பட்டபோதும், தமிழர்களின் உடைமைகள் அழிக்கப்பட்டபோதும் விஜயகுமராணதுங்க அன்றைய ஆட்சியின் மீது கடும் கோபமுற்றிருந்தார்.

வத்தளை ஹெந்தளையில் அமைந்திருந்த சினிமாஸ் குணரத்தினத்தின் விஜயா ஸ்ரூடியோ எரிக்கப்படும் தகவல் அறிந்து, அவ்விடத்திற்கும் ஓடிச்சென்று, திரைப்படச்சுருள்களை பாதுகாப்பதற்கு போராடினார். ஹெக்டர் கொப்பேகடுவ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது, அக்கட்சியின் ஆதரவாளர்கள் அரிசிக் கூப்பன் அச்சிட்டு விநியோகித்து பிரசாரம் செய்தனர். இதனால் ஜே.ஆரின் உத்தரவுக்கு அமைய பொலிஸார் விஜயகுமாரணதுங்கவையும் அவரது தோழர் ஒஸி அபேகுணசேகரவையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். இரண்டுவாரங்களுக்கு மேல் தடுத்துவைக்கப்பட்டார். இதுவிடயமாக ஜே.ஆரை. நேரில் சந்தித்து கணவனின் விடுதலை பற்றி சந்திரிக்கா பேச்சு நடத்தியபோது, அதுகுறித்து பேசுவதை தவிர்த்த ஜே.ஆர், - விஜயகுமாரணதுங்க நடித்த திரைப்படங்கள் பற்றி பேசியிருக்கிறார். இதன் மறைமுக அர்த்தம்: ‘உனது கணவனுக்கு ஏன் அரசியல்? சினிமாவுடன் நின்றிருக்கலாமே’ என்பதுதான். பின்னாளில் சந்திரிக்கா, ஜே.ஆரை, ‘நரி’ என வர்ணித்ததற்கும், இத்தாலிய அரசியல் மேதை ‘நிக்கோலோ மாக்கியாவெல்லி’ க்கு ஒப்பிட்டுப்பேசியதற்கும் இதுபோன்ற காரணங்கள் அநேகம்.

விஜயகுமாரணதுங்க, இலங்கையில் சமாதானத்தை விரும்பியவர். அதற்காக எவருடனும் எந்த நிபந்தனைகளும் இன்றி பேசுவதற்கும் தயாராகவிருந்தவர். பேசியவர். சென்னைக்கு மனைவி சந்திரிக்கா வுடன் சென்று, இலங்கை இனப்பிரச்சினைத்தீர்வு தொடர்பாக முதல்வர் எம்.ஜி.ஆர், அமிர்தலிங்கம் மற்றும் புளொட் உமா மகேஸ்வரன், ரெலோ செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடனும் பேசினார். விடுதலைப் புலிகள் இராணுவத்திலிருந்து இரண்டுபேரை பிடித்து தடுத்து வைத்திருந்தபோது அவர்களை விடுவிப்பதற்காகவும் சென்றவர். அச்சந்தர்ப்பத்தில் கிட்டு, ரஹீம் ஆகியோருடன் பேசியவர். சிலதடவைகள் வடக்கிற்கு நல்லெண்ணத் தூதுவராகச்சென்றார்.

இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பரவலாக்கல்தான் சரியான அர்த்தமுள்ள தீர்வு என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். இலங்கையில் இடதுசாரிகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் வலுவிழந்திருந்த காலப்பகுதியில் தனது மக்கள் கட்சியின் மூலம் சகல தரப்பினரையும் கவர்ந்திருந்தார். ஜே.ஆரும் அரசியலிலிருந்து ஒதுங்கியதையடுத்து, மக்கள் விடுதலை முன்னணி தலைமறைவாகியதையடுத்து, பிரேமதாஸவுக்கு சவாலாக இருந்தவர் அவரைப்போன்று சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து அரசியலுக்கு வந்திருந்தவர் விஜயகுமாரணதுங்க மாத்திரமே. அவரது வசீகரமான முகமும் அவரது அரசியல் எதிரிகளுக்கு வெறுப்பூட்டியது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் அவர் ஆதரித்தார். தமிழர் தரப்பிலும் நல்லெண்ணத்தை அவர் சம்பாதித்திருந்தமையால், இலங்கையின் எதிர்காலத்தில் புதிய அதிபராக வரக்கூடிய சாத்தியமும் அவருக்கிருந்ததை சில மறைகரங்கள் அவதானித்தன. அதன் விளைவுதான் 1988 இல் அவர் மீதான கொடூரத்தாக்குதல். அவரது வீட்டு வாசலில் அவரது பெண்குழந்தையின் முன்பாகவே கொலையாளிகள் அவரைச்சுட்டனர். அவரது வசீகரமான முகத்தை தொடர்ச்சியாகச்சுட்டு சிதைத்தனர்.



சினிமாவிலிருந்து அவர் அரசியலுக்கு வந்ததை அவரது சினிமாத்துறை நண்பர்களும் சிநேகிதிகளும் விரும்பவில்லை. தனது சினிமா விளம்பரத்தை மூலதனமாக வைத்துக்கொண்டு அவர் அரசியல் தலைவனாகவுமில்லை.

அவர் இன்றில்லை! ஆனால், அவரது உறவினர்களான முன்னாள் சினிமா நடிகர்கள் ஜீவன் குமாரணதுங்க, ரஞ்சன் ராமநாயக்க, மற்றும் நடிகைகள் மாலினி பொன்சேக்கா, கீதா குமாரசிங்க ஆகியோர் நாடாளுமன்றத்திற்குள் எளிதாகப் பிரவேசித்தனர்.

சாதாரண குடும்பத்தில் பிறந்து முன்னுரை எழுதியவரின் வாழ்வு, சினிமாவிலும் பல அத்தியாயங்களை கண்டு, அரசியலிலும் பல அத்தியாயங்கள் தொடர்ந்து, வீதியில் முடிவுரையை கண்டது. அவரது உற்ற நண்பர் ஒஸி அபேகுணசேகர அவரது மறைவுக்குப்பின்னர் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து, காமினி திஸாநாயக்காவுடன் விடுதலைப்புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் மேல் உலகம் சென்றதும், அவரது காதல் மனைவி சந்திரிக்கா, தனது பதவிக்காலத்தில் மக்கள் விடுதலை முன்னணியை இணைத்ததும், பின்னாளில் ரணில் - மைத்திரி கூட்டுக்கு சூத்திரதாரியானதும் அரசியலில் நாம் காணும் முரண் நகை!

(முற்றும்)



(இ-வ): சந்திரிகா குமாரதுங்கா, முகுந்தன் என்கிற உமாமகேஸ்வரன் அருகிலுள்ளார், நடுவில் சிரிப்பவர் வெற்றிச்செல்வன், லுங்கி அணிந்திருப்பவர் விஜய குமாரதுங்கா. இது அக். 1985-ல் டெல்லியில் எடுக்கப்பட்ட படம்

# மூடப்பட்டுக் கிடக்கும் கல்விக்கான உரிமை

பஸ்றி ஸீ.ஹனியா
LL.B (Jaffna)



> அசாதாரண சூழ்நிலையின் போது கல்வி உரிமையை விட உயிரைக் காப்பாற்றுதல் என்ற பொறுப்பு அரசுக்கு அதிகமாகி வருகின்றது.

நாளைய உலகை ஆள்வதற்காக நாம் கொடுக்க இருக்கின்ற எமது எதிர்கால சந்ததியினரின் எதிர்காலம் சிறப்பான முறையில் இருக்க வேண்டுமானால் நிகழ்காலத்தில் அவர்கள் அதற்கான தகுதிகளை வளர்த்துக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

இங்கு தகுதி என்று கூறியது கல்வி ரீதியில் அடிப்படை அறிவைக் கொண்டிருத்தல் ஆகும். ஆனால், இன்றைய நிலைமையானது அடிப்படை அறிவைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றதா என்ற வினாவுக்குப் பல பதில்கள் மனதில் ஊஞ்சலாக ஆடிக் கொண்டிருக்கின்றன.

அந்த வினாவுக்கான பதில்களே இன்றைய கட்டுரையின் புரிதலாக இருக்கப் போகின்றது.

பிள்ளையின் கல்வியானது மிக முக்கியமான உரிமையாகும். இது அனைவரும் அறிந்த விடயமே. இது யாராலும் எதற்காகவும் எந்தச் சந்தர்ப்பத்திலும் பிரிக்கவோ - மறுக்கவோ முடியாத உரிமையாகும் .

ஆகவே, ஒவ்வொரு பிள்ளையும் தன் கல்வியைக் கற்றுக்கொள்வதற்கான உரிமையானது இலங்கையைப் பொறுத்தவரையில் இலவசக் கல்வியாக இருப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

அந்தவகையிலேயே இற்றைக்குக் காணப்படும் அசாதாரண சூழ்நிலையால் அதாவது கொரோனாப் பரவலின் காரணமாக பாடசாலைகள் சுமார் ஒரு வருட காலத்துக்கு மேலாக மூடப்பட்டு கல்வி நடவடிக்கைகள் இடம்பெறாமல் இருக்கின்றன. இந்தவொரு துர்ப்பாக்கிய நிலையை ஈடுசெய்வதற்காக நிகழ்நிலை கற்பித்தல் மற்றும் இணையவழி ஊடான கற்பித்தல் என்பன நடத்தப்பட்டு வருகின்றன. ஆனாலும், இலங்கையின் சட்டத்தின்படி ஒருவருக்கான உரிமை சமத்துவமாக வழங்கப்பட வேண்டும் என்பது கட்டாயமாகும்.

எனவேதான் கல்விக்கான உரிமை சமத்துவமாகவே வழங்கப்பட வேண்டும். எனினும், இலங்கை போன்ற வறுமைக்கோட்டுக்குக் கீழிருக்கும் மற்றும் தொழில்நுட்ப ரீதியில் சிறப்பான வளர்ச்சியைக் கொண்டிருக்காத ஒரு நாட்டில் இணையவழிக் கற்பித்தலானது சாத்தியப்படும் என்பது கானல்நீர்தான்.




ஆகவே, வசதிகளைக் கொண்டிராத மக்களைக் கொண்டு இணையவழி கற்பித்தலை நடத்தும்போது பல மாணவர்கள் அதன் பலனை அடைந்துகொள்ளத் தவறுகின்றனர். இங்கு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சமத்துவமானது தவறவிடப்பட்டதாகக் கருதலாம். அதாவது வசதி இருக்கும் மாணவர்கள் கல்வியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிலையிலும் குறைந்த வசதி கொண்ட மாணவர்கள் கல்வி இல்லாமல் அலையும் ஒரு நிலையும் காணப்படுகின்றது. இது மிகப்பெரிய கல்வி உரிமை மீறல் என்பது தெட்டத் தெளிவாகின்றது.

இவ்வாறான கல்வி உரிமை ஒருபுறம் இருக்க மறுபுறம் இன்றைக்குக் காணப்படும் உயிர்கொல்லி நோயான கொரோனா பரவலானது உலகையே ஒரு உலுக்கு உலுக்கிக் கொண்டிருக்கின்றது.



இந்நிலையில், உயிரைக் காப்பாற்றுவதுகூட சிரமமாக இருக்கும் இக்காலகட்டத்தில் கல்வி உரிமை பற்றிப் பேசுவது சரியா என ஒரு தரப்புக் கூற, மற்றைய தரப்பு எவ்வாறு இருந்தாலும் கல்விக்கான உரிமையை வழங்க வேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கின்றது.

எது எதுவாக இருந்தபோதிலும் அரசின் பிரதான கடமை மக்களின் உயிரைக் காப்பாற்றுவதாகும். ஆகவே, அரசு மக்களின் உயிரைக் காப்பாற்றும் பணியில் ஓடிக்கொண்டிருக்கும்போது கல்விக்கான உரிமையை நிகர் செய்ய முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலையில் நாடு இருக்கின்றது.

இருந்தபோதிலும் சாதாரண, உயர்தரப் பரீட்சைகள் இடம்பெற்றவை கொரோனாப் பரவல் நேரத்திலும் இணையவழி ஊடாக சிறந்த கல்வியைப் பெற்றுக் கொண்ட வசதியான பிள்ளைகளுக்கு அதிக பெறுபேறுகளைத்  தரும் ஒரு விடயமாகவும், பாடசாலைகளை நம்பி வாழ்ந்த பிள்ளைகளுக்கு வாழ்க்கை இனி கேள்விக்குறியாகும் ஒரு விடயமாக மாறியிருக்கின்றது.



எனினும், இந்த அசாதாரண சூழ்நிலையில் மீண்டும் பாடசாலைகளைத் திறக்கும் போது குறிப்பிட்ட காலத்தில் கட்டடம் மட்டுமே இருக்குமே தவிர அங்கு கல்வி கற்பதற்கு மாணவர்கள் இருக்கமாட்டார்கள்.

கல்விக்கான உரிமை முக்கியமானதாக இருக்கலாம். ஆனால், அந்தக் கல்விக்கான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு மாணவர்கள் உயிருடன் இருக்க வேண்டும்.

இவ்வாறான அசாதாரண சூழ்நிலையின்போது கல்வி உரிமையை விட உயிரைக் காப்பாற்றுதல் என்ற பொறுப்பு அரசுக்கு அதிகமாகி வருகின்றது. இருந்தபோதிலும் தொழில்நுட்ப ரீதியில் நாம் இன்னும் சற்று முன்னேற்றம் அடைந்தவர்களாக இருந்திருந்தால் இற்றைக்குப் பெரும்பாலான மாணவர்களை இணையவழி ஊடான கற்றலுக்கு உட்படுத்தியிருக்கலாம். இருந்தபோதிலும் முடிந்தது முடிந்துவிட்டது.

இவ்வாறான வைரஸ் பரவல் மட்டுமல்லாது மேலும் பல அனர்த்தங்களும் எதிர்காலத்தில் வருவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. ஆகவேதான் தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றத்தைக் கொண்டு செல்வது மேலும் தொழில்நுட்ப உபகரணங்களின் விலையைக் குறைத்தல் அல்லது இலவசமாக வழங்குதல் போன்ற விடயங்களை அதிகரித்தல் எதிர்காலத்தில் வரக்கூடிய பிரச்சினைகளைக் கையாளுகின்ற ஒரு சக்தியை வழங்கும் என்பது திண்ணமாகும்.

மேலும், இந்தப் புரிதலின் முடிவின் ஊடாக கல்விக்கான உரிமை அவசியமாக இருக்கின்ற போதிலும் உயிர் வாழ்வது அத்தியாவசியமானதாகும் என்ற மிகப்பெரும் தேவையின் அடிப்படையிலேயே கல்விக்கான உரிமை மறுக்கப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ளுதல் சிறப்பாக அமையும்.

காலைக்கதிர் Kalaikkathir

# சுமந்திரன், சயந்தன் அ'புரத்தில் தமிழ்க் கைதிகளுடன் சந்திப்பு

அநுராதபுரம், ஒக் 10

அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை நேற்று பகல் நேரில் சென்று சந்தித்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பியும், சட்டத்தரணி கேசவன் சயந்தனும் அக்கைதிகளுடன் நீண்ட நேரம் உரையாடி மேலதிக சத்திய பிரமாண பத்திரங்களை பெற்றுக்கொண்டனர்.

இந்தப் பத்திரங்களை உறுதிப்படுத்துவதற்காக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளரும் சமாதான நீதிவானுமாகிய கந்தையா வாமதேவனும் அவர்களுடன் அநுராதபுரம் சிறைக்குச் சென்றிருந்தார். அமைச்சர் லொஹான் ரத்வத்தை தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்தினார் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பாக அந்த கைதிகளின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பாகவே மேற்படி




மேலதிக சத்தியப்பிரமாண பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

அவை வரும் வாரத்தில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை ஒட்டி மேலதிக ஆவணங்களாகத் தாக்கல் செய்யப்பட இருக்கின்றன.

# மாகாண முதலமைச்சர் பதவிக்காக எம்.பி. பதவியைத் துறக்கும் மூவர்!

2022 முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தற்போது நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் மூவர் இராஜிநாமா செய்வார்கள் எனத் தெரியவருகின்றது.

இது தொடர்பில் கட்சி தலைமைகளுக்கு முன்கூட்டியே அவர்கள் அறிவித்துவிட்டனர் எனவும், மாகாண முதலமைச்சர் பதவியை இலக்கு வைத்தே அவர்கள் களமிறங்கவுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

பதுளை, பொலன்னறுவை மற்றும் குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் மூவரே இவ்வாறு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவரும் சவாலை ஏற்று மாகாண முதலமைச்சர் பதவிக்காகப் போட்டியிடுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்லர் வடக்கு மீனவர்கள்

## மீனவ சம்மேளத்தின் தலைவர் தெரிவிப்பு



எங்களது வயிற்றுப் பிழைப்புக்காகத்தான் நாங்கள் போராடுகின்றோம். ஆகவே வடக்கு மீனவர்கள் இந்தியாவுக்கு எதிரானவர்கள் என்று யாரும் எண்ணக்கூடாது என யாழ். மாவட்ட மீனவ சம்மேளத்தின் தலைவர் அ.அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் இந்திய இழுவைப் படகு எல்லைதாண்டி வருவதைத் தடுக்கும் முகமாக கவனவீர்ப்பு போராட்டமொன்று கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி போராட்டம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கும்போதே அ.அன்னராசா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர், இலங்கைக்கு வருகைத் தந்தபோது, தமிழ் அரசியல் கட்சியினர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

ஆனால், இதன்போது இந்திய மீனவர்கள் எல்லை தாண்டும் அத்துமீறல் தொடர்பில் யாரும் பேசவில்லை. அது மிகவும் வேதனை அளிக்கின்றது. இந்தியாவில் தமிழ் நாட்டிலுள்ள தொப்பில் கொடியிருக்கும் எங்களுக்கு உதவி செய்கின்றார்கள். அதற்கு நன்றிக்கடனாக இருப்போம்.

ஆனால் எமது வாழ்வாதாரமான தொழிலை அழிக்கும்போது வடக்கு மாகாண மீனவர்கள் என்னசெய்வது.

இந்தியாவில் ஆறுகோடி மக்கள் இருக் கின்ற இடத்தில் சுமார் 2,000, 3,000 இழுவை மடி படகுகள்தான் இருக்கின்றன. இலங்கை கட்டளை கோவைப்படி நடைமுறைப்படுத்தலாம். இந்த விடயத்துக்கு பேச்சு ஊடாகத் தீர்வு காணலாம் என இனியும் இலங்கை அரசாங்கம் ஏமாற்றக்கூடாது.

வெளிநாட்டு மீனவ நடைமுறையான சட்டத்தை முற்றுமுழுவதுமாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதுதான் எமது கோரிக்கையிலான நிலைப்பாடாகக் காணப்படுகின்றது.

நாங்கள் இந்தியாவுக்கு எதிரானவர்கள் என்று யாரும் எண்ணக்கூடாது. தாயும் பிள்ளையும் ஒன்றாக இருந்தாலும் வாயும் வயிறும் வேறு. வயிற்று பிழைப்புக்காகத் தான் நாங்கள் போராடுகின்றோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியல் ஸ்திரமற்ற நிலையில் முதலீட்டை ஈர்ப்பது எப்படி?

## இரா.சாணக்கியன் கேள்வி

பயங்கரவாதத் தாக்குதல் ஒன்று நடத்தப்படும் என்ற அச்சுறுத்தல் காணப்படும் நாட்டுக்குள் எப்படி அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதி செய்ய முடியும் என இரா.சாணக்கியன் கேள்வியெழுப்பியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் கருத்துத் தெரிவித்த அவர் -

வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக அரசாங்கம் தேசிய பாதுகாப்பு மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிசெய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

அரசாங்கத்தால் சலுகைகள் வழங்கப்பட்டாலும் வாழ்க்கைத் தரம், அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய பாதுகாப்பு போன்ற காரணிகளே வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அடிப்படை அம்சம் என்றும் அவர் சுட்டிக்



காட்டினார்.

கட்டுமானத் துறைக்கு வரிச் சலுகைகளை வழங்குவதற்குப் பதிலாக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தொழில்களுக்கு சலுகைகளை வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என இரா.சாணக்கியன் கேட்டுக்கொண்டார்.

# அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் அரசாங்கத்திடம் முக்கிய கோரிக்கை

அரசிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்காவிட்டால் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படும் என அரச தாதியர் உத்தியோகத்தர் சங்க யாழ்.போதனா வைத்தியசாலை கிளை தலைவர் தி.பாணு மகேந்திரா தெரிவித்துள்ளார்.

நாடு பூராகவும் அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கத்தால் கடந்த வெள்ளிக்கிழமை கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே தி.பாணுமகேந்திரா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

அரசிடம் ஏற்கனவே முன்வைத்த 7 அம்சக் கோரிக்கையை விரைவுபடுத்தி தருமாறு கோரியே கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தோம்.

ஆகவே, எமது கோரிக்கைகளுக்கு சுகாதார அமைச்சும் அரசாங்கமும் உரிய தீர்வை வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாறாக தீர்வு தராத பட்சத்தில் எமது போராட்டம் மேலும் வலுப்பெற்று, தாய் சங்கத்தின் அனுமதியுடன் அனைத்து தொழிற்சங்கங்களையும் இணைத்து முற்று முழுதான போராட்டத்துக்கு விரைவில் செல்ல வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்.

ஆகவே இந்த அரசாங்கம் எமது கோரிக்கைகளுக்கு காலம் தாழ்த்தாமல் உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க உடனடியாக முன்வர வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நிருபமா ராஜபக்ஷவின் சொத்து விவகாரம்; தகவல் அறியும் உரிமை விண்ணப்பம் தாக்கல்

முன்னாள் பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் சொத்து விவரங்களைக் கேட்டு, ஐக்கிய மக்கள் சக்தியின் இளம் உறுப்பினர்கள் குழு தகவல் அறியும் உரிமை விண்ணப்பத்தை தாக்கல் செய்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினர் ரெஹான் ஜெயவிக்ரமவும் தகவல் அறியும் உரிமை விண்ணப்பத்தை தாக்கல் செய்தவர்களில் ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையகத்தில், இந்த விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. 14 நாள்களுக்குள் தேர்தல் ஆணையகத்தால் தகவல் அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன் என ஜெய விக்ரம கூறியுள்ளார்.

தேர்தல் ஆணையம் தகவல்களை சமர்ப்பிக்கத் தவறினால், மேலதிக நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

பண்டோரா பேப்பர்களில், சர்வதேச புலனாய்வு பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பால் பெறப்பட்ட இரகசிய ஆவணங்கள், பல தசாப்த கால உள்நாட்டுப் போரால் நாடு சீரழிந்த நிலையில், நிருபமா ராஜபக்ஷ மற்றும் அவரது கணவர் திருக்குமார் நடேசன் கடல் கடந்த அறக்கட்டளைகள் மற்றும் ஷெல் நிறுவனங்களை நிறுவினர் கலைப்படைப்பு மற்றும் ஆடம்பர குடியிருப்புகள் மற்றும் பணம், பத்திரங்கள் மற்றும் பிற சொத்துக்களை இரகசியமாக சேமித்து வைத்தனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எழுதிய கடிதத்தில், நடேசன் அவர் மற்றும் அவரது மனைவி மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார்.

# பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாக பெண்கள் நியமனத்துக்கு ஐ.நா. பாராட்டு

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாக பெண்கள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளமைக்கு ஐக்கிய நாடுகள் சபை பாராட்டு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மூன்று பெண் பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பதவி உயர்வு சமத்துவத்தின் அவசியத்தை அங்கீகரிப்பதுடன், சட்ட அமுலாக்கத்தில் பெண்களின் பங்களிப்பு ஒரு முக்கியமான படியாகும் என்று அவர் கூறியுள்ளார்.

டுவிட்டர் பதிவொன்றை இட்டுள்ள அவர் இதனைக் கூறியுள்ளார். அந்தப் பதிவில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

சட்ட அமுலாக்கத்தில் பெண்களின் சமத்துவம் மற்றும் பங்களிப்பின் அவசியத்தை அங்கீகரிக்கும் ஒரு முக்கியமான படியாக, பதில் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாக பதவி உயர்வு பெற்ற மூவருக்கு வாழ்த்துக்கள். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களாக கடமையாற்றி வந்த ஏ.ஆர். ஜயசுந்தர, என்.டி. செனவிரட்ன மற்றும் டபிள்யூ.ஜே. பத்மினி ஆகியோர் பதில் பிரதி பொலிஸ் மா அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த பதவி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நாட்டில் தற்பொழுது நான்கு பெண் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

# குருநகர் மீனவர் மீதான தாக்குதலைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் பணிப்புறக்கணிப்பு!

## குற்றவாளியான இந்திய மீனவரைக் கைதுசெய்யுமாறும் வலியுறுத்து

(ந.லோகதயாளன்)

**யாழ்ப்பாணம், குருநகர் மீனவரின் படகு மீது தாக்குதல் மேற்கொண்ட இந்திய மீனவரின் படகு மீது நடவடிக்கை எடுக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என்று இராமேஸ்வரம் துறைமுக விசைப்படகு மீனவர் சங்கம் அறிவித்துள்ளது.**

**குருநகரில் இருந்து கடந்த 2ஆம் திகதி தொழிலுக்குப் புறப்பட்ட மீனவரின் படகு மீது இந்திய மீனவரின் ட்ரோலர் மோதி சேதப்படுத்தி தாக்கியதால் இலங்கை மீனவரின் படகு சேதமடைந்ததோடு மீனவரும் படுகாயமடைந்திருந்தார். இதனால் தொழில் இழந்த நிலையில் குருநகர் மீனவர் கரை திரும்பி சங்கத்தில் முறையிட்டார்.**

இந்தத் தாக்குதலைக் கண்டித்து யாழ்ப்பாணம் மீனவர்கள் இணைந்து போராட்டத்திலும் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்ட மீனவருக்கு இழப்பீடு வழங்குமாறும், இவ்வாறானா சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதனை உறுதிசெய்யுமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தநிலையில் தமிழகம் - இராமேஸ்வர மீனவர்கள் நேற்று முற்பகல் 11மணி முதல் குருநகர் மீனவரின் படகை மோதிய இந்திய மீனவரைக் கைதுசெய்து அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும், குருநகர் மீனவருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

# மாப்பாண முதலியாரின் மறைவு தமிழர்களுக்குப் பாரிய இழப்பு!

## யாழ். மாநகர மேயர் இரங்கல்

யாழ். நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரி இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் இழப்பானது தமிழர்களாகிய எமக்குப் பாரிய இழப்பு என்று யாழ். மாநகர மேயர் வி. மணிவண்ணன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அவரது இறுதிக் காலத்தில் அவரோடு பழகும் வாய்ப்பும் அவரிடம் ஆசீர்வாதம் பெறும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது.

மிகச்சிறந்த பண்பாளன்; எல்லாவற்றுக்கும் மேலாக ஆடம்பரமோ பந்தாவோ அற்ற எளிமையின் வடிவமான மிகச் சிறந்த மனிதன்; மிகச்சிறந்த நிர்வாகி அவர்.

அவர் எம்மை விட்டுப் பிரிந்தபோதும் அவருக்கு நிகரான அல்லது ஒருபடிமேலான தனது புதல்வனை எமக்குத் தந்திருக்கின்றார்.

யாழ். மாநகர சபை தற்காலிகமாக இயங்குகின்ற இடம் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்துக்கு உரித்தான இடம். போரினால் நகரில் இருந்த மாநகர சபைக் கட்டடம் இடிந்து அழிந்தபோது அதனைத் தற்காலிகமாக இயக்க ஓர் இடம் தேவைப்பட்டது. அந்த இடத்தை இலவசமாக மாநகர சபைக்குத் தந்துதவியவர் இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியாரே ஆவார்.

யாழ். நகரில் தற்போது மிகக் கம்பீரமாகக் கட்டி எழுப்பப்பட்டுவரும் மாநகர சபைக்கான நகர மண்டப கட்டடத் தொகுதி இலங்கையின் மிகச்சிறந்த கட்டட கலை வல்லுநர்களில் ஒருவரான இவரது புதல்வனின் வடிவமைப்பிலேயே அமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.



இந்திய அரசால் கட்டி முடிக்கப்பட்டு மாநகர சபையிடம் கையளிக்கப்படவுள்ள யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தின் வடிவம் தொடர்பில் கட்டட கலை நிபுணர்களிடையே ஒரு போட்டி நடத்தப்பட்டது. அப்போட்டியாளர்களுக்கு மத்தியில் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் நடுவர்களுள் ஒருவராகவும் இவரது புதல்வன் செயபட்டார்.

யாழ். மாநகர சபைக்கும் நல்லூர் உற்சவகாலத்துக்குமான தொடர்பு விவரிக்க வேண்டிய ஒன்றல்ல.

அந்தவகையில் மாநகர சபைக்கும் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்துக்கும் அதன் நிர்வாகிகளுக்குமான பந்தம் நீண்டது; ஆழமானது.

அந்தவகையில் அவரது இழப்பு தமிழர் களாகிய எமக்குப் பாரிய இழப்பு. அவரது பிரிவால் துயர் உற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள், பக்தர்கள் அனைவருக்கும் எனதும் மாநகர சபையினதும் சார்பில் ஆழ்ந்த இரங்கல்களையும் அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய நல்லூர் கந்தனை வேண்டுகின்றேன் - என்றுள்ளது.

# 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாவது டோஸாக பைஸர்!

## விரைவில் தடுப்பூசி வழங்க ஏற்பாடு



நாட்டில் 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் மூன்றாவது டோஸாக பைஸர் தடுப்பூசி வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

இதற்காக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் ஒரு கோடி 45 லட்சம் பைஸர் தடுப்பூசிகள் பெறப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் கூறினார்.

# 200 அடி பள்ளத்தில் வீழ்ந்து இருவர் சாவு

பதுளை, ஹெலி - எல பகுதியிலுள்ள ரிலா எல்ல நீர்வீழ்ச்சியைப் பார்க்கச் சென்ற இரு இளைஞர்கள், நீர்வீழ்ச்சியின் மேல் பகுதியிலிருந்து தவறி விழுந்து பலியாகியுள்ளனர்.

வெள்ளியிரவு இடம்பெற்றுள்ள இந்த அனர்த்தத்தில் வீரகெட்டிய, தெஹியத்தகண்டிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 26 மற்றும் 36 வயதுகளுடைய நபர்களே உயிரிழந்துள்ளனர்.

ரிலா எல்ல நீர்வீழ்ச்சிக்கு அருகே நேற்றி ரவு நான்கு இளைஞர்கள் மது அருந்தியுள்ளனர். இதையடுத்து குறித்த இரு இளைஞர்களும் மதுபோதையில் நீர்வீழ்ச்சியைக் காணச்சென்றுள்ளனர். அதன்போது நீர்வீழ்ச்சியின் மேல் பகுதியிலிருந்து சுமார் 200 அடி பள்ளத்தில் விழுந்து இந்த விபரீதம் இடம்பெற்றுள்ளது எனப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

# சிறுமிக்கு வாயில் சூடுவைத்த தாய்!



(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி, அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட விநாயகர் குடியிருப்புப் பகுதியில் சிறுமிக்கு நெருப்பால் சுட்ட தாய் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தாயார் சமைத்து வைத்த உணவின் அப்பளத்தை 5 வயது சிறுமி தாயாருக்குத் தெரியாமல் எடுத்துச் சாப்பிட்டுள்ளார்.

இந்தக் காரணத்தால் தாயார் பெற்ற மகளுக்கு வாய்ப்பகுதியில் நெருப்பால் சுட்டுள்ளார்.

சம்பவத்தை அவதானித்த சிறுமியின் பேரன் அக்கராயன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

குறித்த தகவலுக்கமைய தாயார் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறுமியின் தந்தை தொழிலுக்குச் சென்ற வேளை இந்தச் சம்பவம் நடை பெற்றுள்ளது.

அக்கராயன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# மேலும் 76 பேர் கைது!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 76 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 80 ஆயிரத்து 360 ஆக உயர்வடைந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# மனைவி படுகொலை; கணவன் சிக்கினார்!

குடும்பத் தகராறு காரணமாக மனைவியைக் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்த கணவன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் களுத்துறை மாவட்டம், புளத்சிங்கள பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோட்டா வீதி, கோவின்ன பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் பெண்ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 119 என்ற இலக்கத்துக்கு வழங்கப்பட்டத் தகவலுக்கு அமைவாக பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து பெண்ணின் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக ஹொரண வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.